[illegible]

V II No-7. July 1929.


ßL
211, 1119BA
M29·11·8

210776

1632


REGD NO: M 1530.
"BALAVINODHINI"
CHILDREN'S FRIEND
பாலவிநோதினி
குழந்தைகளின் அன்பன்.
ஆசிரியர்:
வரகவி திரு. அ. சுப்பிரமணியபாரதி
Vol XI JULY 1929 № 7
PRINTED AND PUBLISHED
BY
V. RAMASWAMY SASTRULU & SONS
323, Tiruvottiyur High Road
Tondiarpet, MADRAS.

*N. B.*—The Subscribers are requested to pay subscriptions to our agents only on obtaining our Bonafide receipts.

All Rights Reserved by the Publishers.

# பாலவிநோதினி

## CONTENTS—பொருளடக்கம்


| | | | பக்கம். |
|---|---|---|---|
| தெய்வ வணக்கம் | ... | ... | 305 |
| ஹிதோபதேசம் | ... | ... | 306, 307 |
| திருக்கோகர்ணம் | ... | ... | 308—312 |
| மது பிரார்த்தனை | ... | ... | 313, 314 |
| நாட்டில் நடக்கும் அநீதங்கள் | | ... | 315, 316 |
| பருவத்தாலன்றிப் பழா | | ... | 317, 318 |
| உண்மையை மறைப்பதற்கு ஒருவராலு மாகாது | | ... | 319—333 |
| சாதுக்களின் தன்மை | ... | ... | 324—327 |
| அகஸ்திய முனிவர் | ... | ... | 328—331 |
| விவேகாநந்தரும் விக்ரகாராதனையும் | | | 332—338 |
| அசுத்தமான ஜலத்தினால் ஏற்படக்கூடிய கேடுகள் | | ... | 339—341 |
| உலகப்போக்கு | ... | ... | 342—344 |
| ஓர் யோக்யன் | ... | ... | 345—350 |
| பக்திக்கினிக்கும் பழவகைகள் | | ... | 351, 352 |


குறிப்பு:—எமது கையொப்பமிட்ட எமது சம்பெ[illegible] ரசீது பெற்றுக்கொண்டு ஏஜண்டுகளிடம் சந்தாத் தொகையை[illegible] செலுத்தக் கோருகிறோம். எமது ரசீது இல்லாமல் போனா[illegible] ஒப்புக்கொள்ளப்படமாட்டாது.

உ

செந்திலாண்டவன் திருவடி துணை

# பாலவிநோதினி

அல்லது

## குழந்தைகளின் அன்பன்

ஒரு மாதாந்தப் பத்திரிகை


தொகுதி 11 | 1929௵ ஜூலை மாதம் | பகுதி 7


### தெய்வ வணக்கம்

கல்லா லெறிந்துமுன் எச்சிலைத் தந்துபின்
கண்ணைப் பறித்துவைத்தும்
கருதுவசை சொல்லியும் செய்யசிறு மைந்தனைக்
கறிசமைத் துண்ணவைத்தும்
வில்லாலடித்து மோர் பாயலிற் றன்னுடைய
விரதஞ் செலுத்துவித்தும்
வேலையிற் றாளோடு சுழன்றும் பிரானுக்கு
மெய்யன்பனென நடந்தும்
நல்லா ரெனப்பேறு பெற்றார்க ளதுபண்டை
நாள்செய்த பூசையீசன்
நற்கிருபை யாமெனக் குன்கிருபை யல்லாது
நாடுவது வேறுமுளதோ
சல்லாப உல்லாச வில்லறு வல்லாள
ஸரஸகோ பாலன் மருகா
சதுர்மறைக ளேதந்த பருமகுரு வாய்வந்த
சரவணப வானந்தனே. (சுப்ரமண்யதேசிகர்)

210774

# ஹிதோபதேசம்

(1) பிறர் குற்றத்தை உன்னிடம் கூறும் ஒருவன் உன் குற்றத்தைப் பிறரிடம் கூறாமலிருக்கமாட்டான். இது பிறர் குற்றங் கூறித்திரியும் இழிஞர் ஒருவருடைய செய்கை. ஆகையினால் அந்த இழிஞருறவை விலக்குங்கள். அவன் உங்கள் வீட்டுக்கு வருவதுங் கூடாது. அதனால் நீங்களும் சிறுமையடைவீர்கள். பிறரால் பெருமை வேண்டுகிறவன் எவனும் பிறர் சீரெல்லாம் அதாவது பிறர் பெருமைகளை யெல்லாம் எடுத்துப் பேசவேண்டும். அதனை மறந்து பிறர் குற்றங்கூறுபவன் ஒரு காலத்திலும் பெருமை யடையமாட்டான். அவன் தன் குற்றமுணர்ந்து முன்னுக்கு வரும் தரமில்லாதவனாய் ஈனனாவான்.

(2) காரியத்தின்மேல் கண்ணுங் கருத்துமுடையவர்கள் "மண் பூனையானாலும் எலி பிடிப்பதே காரியம்" எனத் தங்கட்கிருக்கும் அநுகூலங்களில் மிகச் சிறியதினும் திருப்தியடைவர். லோபியொருவன் அதாவது தன் மக்களுக்கும் வயிறாறச் சோறுபோட மனமில்லாத லோபி "மண் பூனையானாலும் எலி பிடிப்பதே காரியம்" என்று பேசிக்கொண்டு காசு செலவாகாத வழியில் எந்த அநுகூலங்கள் எந்தவிதமான இகழ்ச்சியைத் தருவதாயிருந்தாலும் அதனை மேற்கொண்டு திருப்தியடைவர். இது உலக சுபாவம்.

(3) சிலர் எப்போதும் தங்களை ஆடையாபரணங்களினாலே அலங்கரித்துக் கொள்வதிற் பிரியமுடையவர்களாயிருப்பர். ஆனால் அதற்குத் தக்கபடி யோக்யதையில் உயர வேண்டுமென்பதை மறந்துபோவர். அதுபற்றி முயற்சி ஒரு சிறிதும் எடுத்துக்கொள்வதில்லை. இத்தகைய குணமுடைய



வர்களின் பெருமை வாய்பேசாமலிருந்து வருமளவே பிரகாசிக்கும். வாயைத் திறப்பார்களானால் "விளக்குமாற்றுக்குப் பட்டுக்குஞ்சமா?" என்று ஏசும்படியாய்விடும். ஆகையினால் உடையிலும் ஆபரணம் அணிவதிலும், பேச்சிலும், நடையிலும் மிதமாய்த் தன் அந்தஸ்துக்குத் தக்கபடி யிருக்கவேண்டுமென்பதை நீங்கள் மறவாதீர்கள்.

(4) ஏழையொருவன் இறைவனே! கடவனே! ஆபத்பாந்தவா! உன்னை நான் என்றும் மறவேன். என்னை நீ கவனிக்கமாட்டாயா? என்று கடவுளை அழைத்து வேண்டுகிறான். பணக்காரன் கடவுளொருவர் உண்டென்பதை மறந்தே விடுகிறான். ஆனால் பணத்தைச் சேர்ப்பதில் கவனமாயிருக்கிறான். அவனுக்குப் பணம் பெருகுகிறது. முயற்சி பயன் தாகிறது. கடவுளே நீ கவனிக்கமாட்டாயா என்னை என்கிற ஏழை உழைப்பிலும், முயற்சியிலும் முனைந்து நின்று கடவுளின் துணையையே பின்பற்றி வருவானானால் பணக்காரனைவிடப் பதின்மடங்கதிகமான லாபத்தை யடையாதிருக்கமாட்டான். ஏனெனில் தெய்வ பலமிருக்கிறதல்லவா இவனுக்கு? தெய்வ பலத்தை அடைந்திருந்த பரம ஏழைகளாகிய பாண்டவர்களையும் தெய்வ பலத்தை அலட்சியஞ் செய்த துரியோதனாதியரின் கதியையும் கவனியுங்கள்.

---

தென்ஆப்பிரிக்காவில் ஜூலுக்கள் என்று சொல்லப்படும் ஒரு ஜாதியார் இருக்கின்றார்கள். அவர்களுக்கு ஆணானாலும் சரி, பெண்ணானாலும் சரி, தலைமயிர் ஒரு அங்குலத்துக்குமேல் வளருவதேயில்லை. இந்த ஜுலுக்கர்கள் அரக்கர் வம்சத்தைச் சேர்ந்தவர்களாம். இலங்கையை ஹனுமார் கொளுத்தியகாலத்தில் தப்பி ஓடிவந்தவர்களாம். அவர்கள் அந்த பரம்பரைதான் என்றும் ஒப்புக்கொள்ளுகிறார்களாம், உண்மை எப்படியோ?

(இந்துநேசன்)

# திரு கோகர்ணம்

முன்னொரு காலத்தில் இராவணன் கைலாச மலைக்குச் சென்று அங்கே தவம்புரிந்து வந்தான். அதைக் கண்ட சிவபெருமான் அவனிடம் கருணை கூர்ந்து அவனுக்கு ஒரு சிவலிங்கம் கொடுத்தருளினார். லிங்கத்தைக் கொடுக்கும்போது, "நீ இதை எடுத்துக்கொண்டு போய் உன்னுடைய நகரமாகிய இலங்கையிலே ஸ்தாபனம் செய்து பூசித்து வா. அந்த நகரத்திற்கு எந்தக் காலத்திலும் அழிவு வராது. வழியிலெங்கும் இதை வைக்காதே. வைப்பாயானால் பிறகு இதை அந்த இடத்திலிருந்து எடுப்பதற்கு உன்னாலே முடியாது" என்று கூறியருளினார்.

இராவணன் "அப்படியே செய்வேன்" என்று கூறி வணங்கி விடைகொண்டு சென்றான். சிவபெருமான் இவனுக்கு இப்படி அநுக்கிரகஞ் செய்ததைத் தேவர்கள் அறிந்தார்கள். இராவணன் தேவர்களுக்கு இடுக்கண் செய்கிறவனல்லவா? ஆகையினால் தேவர்கள், இராவணனிடம் அந்த லிங்கம் போய்ச்சேர வொட்டாமல் தடுக்கவேண்டுமென்றெண்ணி, விநாயகரிடம் முறையிட்டுக் கொண்டார்கள். விநாயகர், தம்மிடம் அன்பு பூண்ட தேவர்களுக்கு அநுக்கிரகம் செய்யத் திருவுளங்கொண்டு, "தேவர்களே! நீங்கள் அஞ்சாதீர்



கள். அந்த லிங்கம் இலங்கை போய்ச் சேராதபடி நான் செய்கிறேன்" என்று திருவாய் மலர்ந்தருளினார். தேவர்கள் "உய்ந்தோம்" என்று மகிழ்ந்து விடை கொண்டு சென்றனர்.

இதற்குள் இராவணன் லிங்கத்தை எடுத்துக் கொண்டு இலங்கையை நோக்கிச் சென்றுகொண்டிருந்தான். விநாயகர் அவன் இவ்வாறு புறப்பட்டு வருவதை யுணர்ந்து அவனுடைய வயிற்றில் நீர் நிறையும்படி செய்தார்; அப்பால் ஒரு பிராமண ரூபங்கொண்டு இராவணன் முன்னே போனார். இராவணன் பிராமணனைக் கண்டதும் "ஸ்வாமி நான் ஜலஸ்பரிசம் செய்து வருகிறேன். அது வரையில் இந்தச் சிவலிங்கத்தை வைத்திரும்" என, பிராமணர், "நான் இதனைத் தாங்கும் சக்தியுள்ளவனல்லன். நான் இதைக் கொஞ்சநேரம் வைத்திருந்து பார்த்துப் பின் மூன்றுமுறை கூப்பிடுவேன். நீ அதற்குள் வராவிடில் இந்த லிங்கத்தைக் கீழேவைத்துவிட்டு நான் நடந்து விடுவேன்" என்றார்.

ஜலஸ்பரிசத்துக்குப் போய்வரவேண்டிய அவசியம் மிகுதியாயிருந்தபடியால் இராவணன் "ஐயா, அதற்குள் வந்துவிடுகிறேன். கொஞ்சநேரம் இதனை வைத்திருங்கள் போதும்." என்று கேட்டுக்கொண்டு லிங்கத்தை விநாயகரிடம் கொடுத்துச் சென்றான்.

விநாயகர் சற்று நேரம் லிங்கத்தை வைத்திருந்து பார்த்து இராவணனை மூன்று முறை கூப்பிட்டார். அவ

னால் வரமுடியவில்லை. பின் விநாயகர் இதுதான் சமயமென நினைத்து, லிங்கத்தை அவ்விடத்திலேயே கீழே வைத்துவிட்டு மாயமாய் மறைந்துவிட்டார்.

அப்பால் இராவணன் வந்துபார்த்து லிங்கம் பூமியிலிருப்பதைக் கண்டு "அந்தோ! வந்ததே மோசம்! இனி யென்ன செய்வேன்! கைக்கெட்டியது வாய்க் கெட்டாமற் போயிற்றே!" என்றெண்ணி அந்த லிங்கத்தைப்பெயர்க்கத் தன் முழு பலத்தையும் உபயோகித்துப்பார்த்தான். கைலாசகிரியைத் தூக்கிய அவனுடையபலம் இச்சமயம் பயனற்றுப் போயிற்று. இதனால் நாம் அறியக் கூடியதென்ன? ஒருவன் எவ்வளவு பலமும் மதியுமுடையவனாய் இருந்தாலும் கடவுளுடைய கிருபை அதாவது திருவருளிருந்தாலன்றி அவற்றால் அவன் எந்தக் காரியத்தையும் சாதித்துக் கொள்ள முடியாதென்பதே இது போதிப்பதாகும்.

இப்படித் தன் பலம் வீணாகப் போயும் இராவணன், சிவபெருமானுடைய பலம் பெரிதென்பதைத் தன்னுடைய கர்வத்தினால் உணராதவனாய், "இந்த லிங்கத்திற்கு இத்தனைபலமா? கைலயங்கிரியை அசைத்தெடுத்த என்னிடமா இதனுடைய வல்லமை பலிக்கும்?" என்று கருதி மறுபடியும் தன் பலம் கொண்டமட்டும் எடுத்தான். அது வராமல் பசுவினுடைய காதுபோல் குழைந்து நீண்டது. அந்தக் காரணத்தால் பின்னால் அந்த ஸ்தலத்துக்குக் கோகர்ணம் என்று பெயராயிற்று.



லிங்கம் குழைந்த சமயத்தில் விநாயகர் அங்கே வந்து, "இவ்வளவுதானோ பலம்?" என்றுநகைத்தார். இராவணன் கோபங்கொண்டு விநாயகரைத் துரத்தினான். அவர் சற்று நேரம் அவன் கைக்ககப்படாமல் விளையாடிப் பின் அகப்பட்டார். இராவணன், அவரைப் பிடித்துத் தன் கையினால் அவர் தலையில் ஓங்கி ஒரு குட்டிக் குட்டினான். உடனே விநாயகர் தன் சுயரூபங்கொண்டு துதிக்கையினால் இராவணனைப் பிடித்துப் பந்துபோல் எறிந்து எறிந்து பிடித்துக் கதறவடித்தார். இராவணன், "ஸ்வாமி, நான் அறியாமற் செய்த பிழையைப் பொறுத்தருள வேண்டும்" என்று பிரார்த்தித்தான்.

விநாயகர் அவனைக் கீழேவிட்டு "நீ என்னைச் சினந்து தலையிலே குட்டியபடியால், உன்னுடைய இருபது கரங்களினாலும் பத்துத் தலைகளிலும் குட்டிக்கொள்" என்றார். இராவணன் அப்படியே குட்டிக்கொண்டு துதித்தான். விநாயகர், "இன்றுமுதல் உன்னைப்போல் குட்டிக்கொண்டு என்னைத் துதிப்பவரிடம் நாம் மகிழ்ச்சி யடைவோம்" என்று கூறி உடனே மறைந்தருளினார்.

துஷ்டர்களுக்கு விரோதிகளிருப்பார்கள். விரோதிகள் சமயம் பார்த்துக்கொண்டிருந்து தங்களுக்குத் தீங்கு செய்யும் துஷ்டர்களை அடக்க வழிபார்ப்பார்கள். துஷ்டர்களை ஆபத்துத் தொடர்ந்துகொண்டே போகும். அவமானமும் தண்டனையுமே அவர்களுடைய செய்கைகளுக்குப் பயனாக விருக்கும். அவர்கள் தவறி நன்மை செய்தாலும் சிறப்படையாது. அது

தீமையாக மாறி அவர்களுக்கே தீமையை யுண்டாக்கும், அவர்கள் கற்றுள்ள வித்தைகளும் தந்திரங்களும் அவர்களுக்குத் துணையா யிருப்பதுபோலிருந்து முடிவில் துன்பத்தையே விளைக்கும். துஷ்டர்களுடன் சேர்ந்தவர்களும் இக்கதியையே அடைவார்கள்.

என்ன சொல்வதிந்த விநோதத்தை! இராவணன் செய்த தவசுக்குச் சிவபெருமான் மகிழ்ந்து லிங்கந் தந்தார். விநாயகர் அதனைக் கெடுத்தார். ஏன் நல்லவர்களாகிய தேவர்களுக்கு அவன் தீங்கு செய்து வந்தானல்லவா? முயற்சிக்குப் பயன் கிடைத்தது. ஆனல் தீய செய்கைக்குத் தண்டனையும் கிடைத்தது. இந்த இரண்டு காரியங்களையும் கடவுளே செய்தார். ஆகையினுல் சாமர்த்தியமும் ஆற்றலும் உடையோமென்கிற கர்வத்தினுல் தகாத செய்கைகள் செய்து பகைமை தேடிக்கொண்டவன் முன்னுக்கு வரமுடியாதென்பதை உணர்ந்து நல்ல வழியிலே நிற்க முயலுங்கள். அடக்கமா யிருங்கள். எந்த ஒரு சிறுவனுடைய பகையையும் தேடிக்கொள்ளாதீர்கள். பகை சமயத்தில் கழுத்தறுக்கும் வாள்போல் வந்து தன் வல்லமையைக் காட்டுமென்று அறியுங்கள். பெரியோர்கள் தங்களுக்குத் தீமை செய்பவர்களுக்கும் தீங்கு செய்யமாட்டார்கள்; அவர்களையும் ஆதரிப்பார்கள்; அவர்கள் பிழையை மறந்து விடுவார்கள்; இன்சொல்லே பேசுவார்கள்; இயன்றவரையில் அவர்களைத் திருத்த முயல்வார்கள். அவர்களுக்கு எந்தக் காலத்திலும் எந்த நிலையிலும் சகாயம் ஏற்படும். அவர்களுக்கு எங்கும் பயமில்லை. அவர்களை யாரும் விரும்புவார்கள். ஆகையினுல் "நன்மை கடைப்பிடி" என்று ஔவையார் கூறியபடி நல்லவைகளை நாடி அவ்வழியிலேயே நிற்க முயலுங்கள்.

## நமது பிரார்த்தனை

"ஆங்கிலக் கவிஞரில் டென்னிஸன் என்பவர் ஒருவர். அவர் ஒரு சமயம்—

*Saxon and Norman and Dane are we*

ஸாக்ஸனும் நார்மனும் தேனரும் ஆவேம் என்று பாடியிருக்கிருர். இதுபோல் இந்திய ஜனத்தைப் பற்றியும் இனியொரு மகாகவி தோன்றி—

*Hindu and Muslim and Parsi are we*
*But all of us one in our worship of*
*Thee Our Mother.*

ஹிந்துவாய் முஸ்லிமாய்ப் பார்ஸியா யிருப்பினும்
நின்னையாம் தொழும்பொழுது ஏகமாயிருப்போம்
எங்கள் தாயே

என்றும் பாடுவார்" என்னும் இந்த அரிய உபதேசமானது, ஒரு சிறு துண்டுக் காகிதத்தில் அச்சிடப்பட்டிருப்பதைச் சில வருஷங்களுக்குமுன் நான் பார்த்த ஞாபகம் இருக்கிறது. ஆனல் அதனை நான் நேற்று (1—7—29) என்னுடைய பழைய பாக்கெட் டயிரியில் என் கையால் குறிப்பிட்டிருக்கக் கண்டு மகிழ்ந்து அதனை உங்களுக்கு வரையலானேன்.

இந்த உபதேசத்தை மறக்கவே படாது. இந்த உபதேசம் சாதாரணமானதல்ல. இதன்படியே இப்போதும் இந்தியாவில் உற்சவ காலங்களில கூடும் பலதேசவாசிகளும் ஒரு தாய் வயிற்றிலே பிறந்த சகோதரர் போல் நடந்துகொள்வதை நாம் காண்கிறோம்.

பாரததேவியை இந்தியாதேசவாசிகளனைவரும் மாதாவாய்க் கருதி வணங்கவேண்டுமென்பது பெரியார் போதனை. நாம் மாற்றாந்தாய்க் குழந்தைகளைப்போலிருப்பது கூடாது. ஆனால் இப்போது ஜனங்களுக்குள் விபரீதபுத்தியினால் ஜாதித்வேஷமேற்பட்டு மேற்கூறிய உயர்ந்த போதனைகளையெல்லாம் மறக்கும்படி செய்கிறது. பிள்ளைகள் அந்தப் போராட்டத்தில் பிரவேசிப்பது கூடாது. பொதுநிலையிலிருந்து எந்த வகுப்பினருக்கும் விரோதம் வாராதவழியில் சகோதரபாவம் கொண்டு நாட்டுக்கும் நலந்தேடவேண்டும். இதுவே நமது பிரார்த்தனை. (பாலவிநோதினி)

## தலை மயிரால் தேசமறிதல்

ஒருவன் எத்தேசத்தைச் சேர்ந்தவனெனக் கண்டுபிடிக்கப் புதியவழியொன்றைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். தலைமயிரில் இரண்டொன்றைக் கொண்டு நுட்பமான தராசில் நிறுத்து அதைக்கொண்டு கண்டுபிடித்து விடுகிறார்கள். வெள்ளையர்களுடைய மயிரைவிட சீனர், ஜப்பானியர் முதலியவர்களின் மயிர் 100-க்கு 60 மடங்கு அதிக கனமாயிருக்கிறது. நீக்கிரோவர் மயிரைவிட வெள்ளையர் மயிர் 100-க்கு 50 மடங்கு அதிக கனமாயிருக்கிறது.

## நாட்டில் நடக்கும் அநீதங்கள்

(1) செக்கான் செக்கில், கழுத்திலே புண்ணுள்ள மாட்டைக் கட்டி ஓட்டுகிறான். மாமியார் மருமகளை வீட்டுவேலையிலே போட்டு வாட்டுகிறாள். மருமகளும் சில வீட்டில் மாமியாரை வீட்டு வேலைக்காரியாகக் கொண்டு மகிழ்கிறாள். இந்த அக்ரமத்தை வீட்டு எஜமானனாகிய மாமியாரின் மகன் கண்டு ஆநந்தமடைகிறான்.

(2) கிழவன் இரண்டாந்தார மனைவியிடம் அகப்பட்டுக்கொண்டு விழிக்கிறான். அக்கிழவன் விழிக்கட்டும், சாகட்டும். கிழட்டுப் பயலுக்கு மனைவி என்ன கேடு. அந்தச் சிறுக்கி மூத்தாள் பிள்ளைகளுக்குச் சரியாய்ச் சோறு போடாமலும் வேலையிட்டு உழலவைத்தும் கிண்ணாரம் போட்டுக் குதிக்கிறாள். புருஷனாகிய கிழவன் அது கண்டு தாளம்போட்டு மகிழ்கிறான்.

(3) புதுக்கோட்டையில் மூலைக்கு மூலையிலுள்ள தெருக்குழாய்களில் தண்ணீரெடுக்கக் குடங்களுடன் கூடும் பெண்டுகளிடும் சண்டையில் மண்டையுடைத்துக் கொள்வதொருபக்கமிருக்க அவர்களை அவ்வூர்க் கான்ஸ்டேபில் விலக்குவதற்காக அவர்களிடம் கூலியடைந்து மகிழும் அநீதத்தைப் பூமி பொறுக்கிறது. இது விநோதம்! இங்கு மோட்டார் ஓட்டிகளுக்கும் கான்ஸ்டேபில்களுக்கும் இடையில் இந்த விநோதங் காணலாம்.

(4) காப்பி ஹோட்டலில் இட்டிலிப் பிரியர்கள் இட்டிலியைச் சட்டிணியில் குழப்பி இரண்டு கைகளாலும் பிட்டுப் பிட்டுவைத்துப் பின் சரிபார்த்து வாயிற் போட்டுக்கொண்டு ஒத்து ஊதுகிறவனுடைய கன்னம் போற் கன்னமிரண்டு உப்பக் குதப்பும் அழகைக் கண்டவர் வியவாமலிரார். அந்த நாளில் கடல்தாண்டி இந்நாளில் மரத்துக்கு மரம் தாவுவதிலும் தவறிக் கீழே விழுந்து கீச்சிடும் பிராணியாகிய கோபுரவஸ்து கண்டால், தங்களினமென மயங்காமலிராது. ஆனால் ஆசாரசீல னொருவன் கண்டால் அந்த இட்டிலிப் பிரியர்களின் முன்னே வாயிலெடுக்காமல் வெளியே வர முடியாது. என்ன செய்யலாம். இது உயர்ந்த நாகரிகப் பிரியரின் குதூகலக் காட்சியாகையால், இதைக் காண நேர்ந்தால் சிவ சிவ என்று நூறுதரம் ஜபியுங்கள்.

(5) வெற்றிலை, பாக்கு, புகையிலை, சுருட்டு, பீடி, காபி, டீ, முதலியவைகளுக்கு அடிமையான தீரபுருஷர்கள் கையில் காசற்றுப் போனகாலத்தில் பிறர் பொருளை அபகரிக்கும் அழகும் அபகரித்த பின் அதிலிருந்து தப்பித்துக்கொள்ள அவர்கள் பொய் பேசும் புதுமையும் பேசிய பொய்யை இல்லையென மறுத்து யோக்கியர்போல் வெட்கமானமில்லாமல் ஜனக்கூட்டத்தோடு சேர்ந்து உலாவும் அழகும் வீடுகள்தோறு கண்டு பரிதபிக்கின்றார்கள் சாதுக்கள். அந்த தீரபுருஷரின் மனைவிமார்களோ குளம், குட்டை தேடுகிறார்கள் விழுந்துசாக. அந்தத் தீரபுருஷர்களை ஈன்றவர்களோ தங்கள் பிள்ளைகளின் உருவத்தைப் படத்திலெடுத்து, வெற்றிலையென்று செவந்து பரந்து காவியேறி யிருக்கும் அவர்கள் வாயைக் கண்டு மகிழ்கிறார்கள்.

## "பருவத்தாலன்றிப் பழா"

ஒரு சிவயோகி பகவானை நோக்கி நெடுங்காலம் தவம்புரிந்து வந்தார். பகவான் அவருக்குக் காட்சி தரவில்லை. அதனால் அந்த யோகி மனமுடைந் தவராய்த் தவத்தை வெறுத்துப் பைத்தியக்காரனைப் போல் நெடுகலும் சென்று அலைந்துகொண்டிருந்தார்.

அப்படி யிருக்கையில் ஒரு நாள் அவர் கடற் கரைக்குச் சென்றார். அங்கே ஒரு சிறு குழந்தை சமுத்திர ஜலத்தை ஒரு சிறு பாத்திரங்கொண்டு மொண்டு மணிலிலே கொட்டிக்கொண்டிருக்கக் கண்டார். கண்டதும் யோகி, "ஐயா, குழந்தாய், என் இப்படி சமுத்திர ஜலத்தை எடுத்துக் கொட்டுகிறாய்? சமுத்திர ஜலத்தையெல்லாம் இறைத்து வற்றவைப்பதற் கெண்ணியா?" என்று கேட்டார்; கேட்டதுமல்லாமல் கக்கடவென நகைத்தார்.

குழந்தை அது கண்டதும் தானும் கலகலவென்று நகைத்து "ஐயா, உம்முடைய செய்கையை விட என்னுடைய செய்கை அசட்டுச் செய்கையல்ல, குழந்தை விளையாடுகிறது என்று தெரிந்துகொள்ள இயலாத நீர் உம்முடைய ஊனக் கண்ணைக் கொண்டு கடவுளைக் காண விரும்புகிறீரே! நான் எத்தனை வாய் கொண்டு சிரிக்கட்டும் உம்மைப் பார்த்து" என்று கூறி

மறைந்தது. குழ்ந்தையைப் பகவான் என்றுணர்ந்தது மல்லாமல் தான் இன்னும் பகவானுடைய திவ்யதரிசனத்தையடையப் பக்குவமடையவில்லை யென்பதும் தெரிந்துக்கொண்டு யோகி மீண்டும் தவமியற்றலானார்;

“அடுக்கு முயன்றாலும் ஆகும் நாளன்றி
எடுத்த கருமங்க ளாகா—தொடுத்த
உருவத்தால் நீண்ட உயர்மரங்க ளெல்லாம்
பருவத்தா லன்றிப் பழா.”

என்னும் முதியோர் முதுமொழி யெண்ணிக் காலத்தை எதிர்பார்த்திருந்தார். (பாபுசாமி ராவ்.)

---

தேவர் குறளும் திருநான் மறைமுடிவும்
மூவர் தமிழும் முனிமொழியும்—கோவை
திருவா சகமும் திருமூலர் சொல்லும்
ஒருவா சகமென் றுணர்.

*தேவர் குறள்-வள்ளுவர் இயற்றிய குறள், நான்மறை-வேதம், மூவர் தமிழ்-அப்பர், சுந்தரர், சம்பந்தர் ஆகிய இம்மூவர் திருவாய்மலர்ந்தருளிய தேவாரம், முனிமொழி-முனிவர் அருளிய வாக்யம் கோவை-மாணிக்கவாசகர் இயற்றியருளிய திருக்கோவையார், திருவாசகம்-மாணிக்கவாசகர் இயற்றியருளிய திருவாசகம், திருமூலர் சொல்-திருமூலர் இயற்றியருளிய திருமந்திரம்.

## உண்மையை மறைப்பதற்கு ஒருவராலு மாகாது

ஓர் ஊரில் ஒரு தையற்கார னிருந்தான். அவன் பெயர் கங்காதரன். ஒரு நாள் அவனுடைய தையற் கடைக்கு முன்னே ஒரு சிறு கூனன் வந்து ஆடிப்பாடி விளையாடி விநோதப்படுத்தினான். தையற்காரனுக்கு அவனிடம் விருப்பமுண்டாயிற்று. அவனுக்கு இரண்டணா இனாங்கொடுத்து அவனை அன்றிரவு தன் வீட்டிற் கழைத்துப்போய் அங்கேயும் தன் மனைவி முதலியவர்கள் கண்டு மகிழ அந்த விளையாட்டுகளை விளையாடும்படி செய்தான். கூனன் குதூகலத்துடன் விளையாடி அவர்களை மகிழ்வித்தான். பின் அவன் அந்தக் கூனனுக்குத் திருப்திகரமான போஜனம் செய்வித்தான். போஜனம் செய்கையில் மாமிசத் துண்டொன்று கூனன் தொண்டையில் சிக்கிக்கொண்டது. அதனால் அவனுக்கு விக்கலும் திணறலுமுண்டாய்க் கொஞ்ச நேரத்தில் அவன் இறந்து போனான்.

அது கண்ட தையற்காரனும் அவன் மனைவியும் ஆச்சரியமும், பயமும் அடைந்தார்கள். அந்தோ! இவனை நாம் கொன்றுவிட்டதாகப் பழிவந்தால்' என்ன செய்வதென்கிற திகிலடைந்து அந்தப் பிரேதத்தை அப்புறப்படுத்த வழிதேடினார்கள்; வைத்தியன் வீட்டிற்குக் கொண்டுபோய் அவனையறியாமல் அங்கே

போட்டுத் திரும்பிவிட்டால், வைத்தியத்துக்கு வந்து இறந்து போனதாகச் செய்தி பரவிவிடும். நாம் தப்பித்துக் கொள்ளலாமென்று தீர்மானித்துக் கொண்டு அக்கணமே அவர்கள் அப்பிரேதத்தை அவ்வூர் வைத்தியன் வீட்டிற்குக் கொண்டுபோனார்கள். அந்த வேளையில் வைத்தியர் போஜனம் செய்துகொண்டிருந்த படியால் அவ்வீட்டு வேலைக்காரனை அழைத்து "யாரோ இருவர் நோயாளியொருவனைக் கொண்டுவந்திருக்கிறார்கள். என்று வைத்தியரிடம் சொல்லு, கொஞ்சம் போ, அவசரம்" என்று கூறி அவனை வீட்டிற்குள்ளே அனுப்பிவிட்டு அந்தப் பிரேதத்தை அங்கே அவ்வீட்டு நடையிலிருந்த மச்சுப் படியில் சாத்திவிட்டு வாயு வேகத்தில் வீடுபோய்ச் சேர்ந்துவிட்டார்கள்.

சற்று நேரத்தில் வைத்தியன், வெளியே வந்து எங்கே நோயாளி என்று கேட்டுக்கொண்டே திரும்பிப் பார்த்தான், அங்கே மச்சுப் படியில் கிடந்த பிரேதத்தைக் கண்டு "இது என்ன விநோதம்! அடே இவனைக் கொண்டுவந்தவர்கள் எங்கே?" என்று வேலைக்காரனைக் கேட்டான். வேலைக்காரன் நாற்புறமும் பார்த்து "எங்கேயோ காணோமே அவர்களை!" என்று கூறித் தியங்கி விழித்தான். வைத்தியன் மயங்கிப் பிரேதத்தைத் தொட்டான்; பின் மோசம் நடந்திருக்கிறதென அறிந்து, ஓகோ நாம் கொன்றுவிட்டதாகப் பழிவந்து சேருமே! என்ன செய்வது, என்றஞ்சி வேலைக்காரனுடைய உதவியைக் கொண்டு அப்பிரேதத்தை ஒரு



நிமிஷத்திலே பத்திரப்படுத்தி வைத்துவிட்டு, கவலையுடன் இரவு ஊரடங்குகிற வரையில் காத்திருந்து அப்பால் அப்பிரேதத்தை அடுத்த வீட்டு மேல் மாடிக்கேற்றி அங்கே இருந்த புகைபோக்கியில் அதை நுழைத்து வைத்துவிட்டுத் திரும்பிவிட்டான்.

அவ்வீட்டுக்காரன், சமையலறையில் சாப்பாட்டுக்கு வந்து உட்கார்ந்தபோது, உயர அண்ணாந்து பார்த்தான். புகைப்போக்கியில் ஒரு மனிதன் நுழைந்து அகப்பட்டுக்கொண்டு வழியில்லாமல் விழிப்பதுபோல் தெரிந்தது. உடனே அவன் "திருடன்! திருடன் புகைப் போக்கியில்" எனக் கூவிக்கொண்டே மாடிக்குப் போய்ப் பார்த்து, "திருட்டுப்பயலே அகப்பட்டுக் கொண்டாயா? அகப்பட்டுக்கொண்டாயா?" என்றுகூறி அங்கு" க்கிடந்த குறுந்தடி யொன்றை யெடுத்து நையப்புடைத்துக் காலைப்பிடித்து வெளியே கொண்டு வந்தான். பேச்சு மூச்சும் பிறவாமலிருக்கவே, "ஓகோ நாம் அடித்த அடியில், மரணமாய்விட்டான். படக்கூடாத இடத்தில் அடிப்பட்டிருக்கிறது. என்ன செய்வதிதற்கு? பழி நம் மீது வந்துசேருமே" என்றெண்ணிப் பயந்து பின் அதனை அப்புறப்படுத்த வழிதேடினான். முடிவில் அதனை அவனும் அவன் மனைவியுமாகச் சேர்ந்து தூக்கிக்கொண்டுபோய், அவ்வூரில் நாற்சந்தி கூடுமிடத்தில் ஒரு லாந்தர்க் கம்பத்தில் சாத்திவைத்துவிட்டு வந்துவிட்டார்கள்.

பின் சுக்ரோதய வேளையில் அவ்வழியே வந்த ஒரு வர்த்தகன் அந்தப் பிரேதத்தைத் திருடனென

நினைத்துக் கைத்தடியால் அடித்துக் கீழே வீழ்த்தினான். அப்போது அவ்வூர்க் காவலாளி வழக்கம்போல் அவ்வழியே வந்தான். அவன் வர்த்தகனைப்பிடித்துக் கொண்டு "ஏன் இவனைக்கொன்றாய்? வா அரசனிடம்" என்று அவனை அந்தப் பிரேதத்துடன் அரசனிடம் கொண்டுபோய் நிறுத்தினான். அரசன் விசாரித்தபோது, வர்த்தகன், "நான் இவனைத் திருடனெனக் கருதி அடித்துக் கொன்றுவிட்டேன். விதிக்கும் தண்டனைக் குள்ளாகிறேன்" என்றான்.

அரசன், வர்த்தகன் மேல் கொலைக் குற்றஞ் சுமத்தி அவனைக் கழுவேற்றிக் கொல்லும்படி உத்தரவிட்டான். கொலையாளி அரசனுக்ஞைப்படி வர்த்தகனைக் கொலைக் களத்திற்குக் கொண்டுபோயினர். அங்கே அவனைக் கழுவிலேற்றும் சமயத்தில் அங்கு வேடிக்கை பார்க்க நின்றுகொண்டிருந்த கூட்டத்திலிருந்து, "ஒருவன் ஓடிவந்து, "இவரல்ல கொலையாளி; நானேஇவனைக் கொன்றவன்" என்றான். அவனை "நீ யார்? நீ எப்படி இவனைக் கொன்றாய்?" என்று அதிகாரி கேட்டார். அவன், "ஐயா இவன் என் வீட்டுப் புகைக் கூண்டின் வழியே என் வீட்டிற் பிரவேசிக்கப் பார்த்து அகப்பட்டுக் கொண்டான். இவனை அச்சமயம் நான் பார்த்துவிட்டபடியால் திருட்டுப் பயலே அகப்பட்டுக் கொண்டாயா" என்று கேட்டு நையப்புடைத்தேன். அந்த அடி பொறுக்காமல் இவன் மரணமாய் விட்டான். பின் நான் இவனை நாற்சந்தியில் நிறுத்திவைத்து விட்டேன்.



ஆகையினால் நானே கழுவுக்கேற்றவன்" என்றான். பின் அதிகாரி அவனைக் கழுவிலேற்றும்படி உத்தரவிட்டார் அதைக் கேட்டதும் ஜனக்கூட்டத்திலிருந்து "நானே இவனைக் கொன்றவன்! வர்த்தகனல்லன்" என்று கூறிக் கொண்டு வைத்தியன் முன் வந்து தான் செய்ததைச் சொன்னான். பின் அதிகாரி வைத்தியனைக் கொலை செய்ய ஆக்ஞையிட்டான், அப்போது, தையற்காரன் முன் வந்து, தான் செய்ததை யெல்லாம சொன்னான். சொல்லவே, அதிகாரி இவர்களைப்பற்றி எல்லாம் அரசனிடம் தெரிவித்தான். அரசன் இந்த விபரீதம் நடந்ததற்குக் காரணந் தெரிந்துகொண்டு எல்லோரையும் பார்த்து, "இப்பொழுது கூறிய உண்மையை அப்பொழுதே என்னிடம் வந்து நீங்கள் தெரிவித்திருப்பீர்களானால் இவ்வளவு தூரத்திற்கு இது வந்திராது. உண்மை பேசுவதில் அச்சங் கொள்வது தவறு. உண்மை எப்போதும் காப்பாற்றும். தொல்லைக் குள்ளாக்காது. உண்மை பேசிய அரிச்சந்திரனைப்போல் சிலசமயம் தொல்லைக்குள்ளாக நேர்ந்தாலும் முடிவில் பெருமையே தரும். ஆதலினாலேதான் பெரியார்

"பொய்யாமை யன்ன புகழில்லை எய்யாமை
எல்லா அறமுங் கெடும்"

என்று கூறினர்.

## சாதுக்களின் தன்மை

ஒரு நகரத்தில் நான் ஒருநாள் சில சாதுக்களைக் கண்டேன். அவர்கள் சந்தோஷமும் துக்கமும் எல்லோரையும் சார்ந்ததாகும் என்னும் முடிவுகொண்டவர்கள். ஆகையினால் நானும் அவர்களுடன் சேர்ந்துகொள்ள விருப்பங்கொண்டேன்.; என் விருப்பத்தை அவர்களிடமும் மெதுவாய்த் தெரிவித்தேன். ஆனால் அவர்கள் என்னைத் தங்களுடன் சேர்த்துக்கொள்ள விரும்பவில்லை. நான், "ஐயன்மீர், நான் பரம ஏழை. ஆதரவற்றவன், அப்படிப்பட்ட என்னை ஆதரியாமல் விலக்குவது தங்களைப்போன்ற சாதுக்களுக்கு அழகாகுமா?—நீங்கள், என்னை உங்களுடன் சேர்த்துக்கொண்டால் நான் உங்களுக்கு யாதொரு தொந்தரவும் கொடுக்கமாட்டேன். உங்களுக்கு என் தேகப்பிரயாசையினால் செய்யக்கூடிய உதவிகளைச் செய்வேன். உங்களுடைய மூட்டைகளைச் சுமந்துகொண்டுவரச் சித்தமாயிருக்கிறேன்—என்னை யெப்படியாவது பெரியமனசு பண்ணி உங்களோடு சேர்த்துக்கொள்ள வேண்டும்"—என்று கெஞ்சிக் கேட்டுக்கொண்டேன்.

அவர்கள் "அப்பா, நீ சொல்வதெல்லாம் சரி. நீ தர்ம நியாயமே பேசுகிறாய். முன்பின் தெரியாத ஒருவனுடைய சேர்க்கையினால் ஒரு சமயம் நாங்கள் பெரிய அவமான மடைந்தோம். எவனையும் பேச்சினாலும் உடையினாலும் நம்புவதற்கில்லை. நன்கு பழகியபின்பே குணங்கள் வெளியாகின்றமையால் முன்பின் பழக்கமில்லாதவன் யாராயிருந்தாலும் அவனுடன் சேரவும் எங்களுக்கு விருப்பமில்லை—ஆதலால் எங்களைக் கட்டாயப்படுத்தாதே. எங்களை நீ யடையும் பயன் ஒரு சிறிது மிராது. நாங்கள் ஊரூராய்ப் போய் அலைபவர்கள்—என்றார்கள்.

நான் பழயபடி என்னைச் சேர்த்துக்கொள்ளும்படி கட்டாயப் படுத்தினேன். அவர்கள் சாது சங்கத்தின் பெருமையை எடுத்துக் கூறினார்கள். "சாது சங்கம் கிடைப்பதருமை யாகையினால் நான் உங்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன். இவ்வேழையின் மீது இரக்கங் கொள்ளவேண்டும்" என்றேன்.

அவர்கள் "அப்பா, எங்களிடம் சில நாட்களுக்கு முன் ஒருவன் வந்தான். அவன் சாதுவைப்போல் வேடம் பூண்டிருந்தான், ஆனால் அவன் திருடன். அவனுடைய வெளிவேஷத்தில் மயங்கி நாங்கள் அவனை எங்களுடன் சேர்த்துக்கொண்டோம். அவன் சிலநாள் வரையில் பரம சாதுவைப்போல் நடித்துவந்து எங்களைவிட்டு எப்படியோ பிரிந்து ஒருவீட்டில் நுழைந்து சில விலையுயர்ந்த பொருளைத் திருடி அகப்பட்டுக்கொண்டான். அவன் எங்களுடனிருந்ததை அவ்வூராரிற் சிலர் பார்த்திருந்தபடியால் அவர்கள் எங்களையும் திருடர்களெனவே கருதிப் பிடித்துக்கொண்டார்கள். கடைசியில் நாங்களும் அவனுடன் சேர்ந்து சிறைவச

210776
210776

மிருக்க நேர்ந்தது. அன்று முதல் நாங்கள் உலகத்தில் எவருடைய சேர்க்கையையும் விரும்பாமலிருந்து வருகின்றோம். அப்பனே, நீ நல்லவனுயிருப்பாய், அது பற்றி எங்களுக்குத் தெரியாது. உன் நடவடிக்கை நல்லதாகவே இருக்கட்டும். நீ எந்த உடையை அணிந்துகொண்டாலும் சரி, நீ உன் தலையில் ஒரு வேந்தனைப்போல் கிரீடம் தரித்துக்கொண்டாலும் சரி. உன் உடம்பில் கவசம் பூண்டுகொண்டாலும் பாதகமில்லை. ஆனால் நல்லவனுகவும பரிசுத்தவானுகவும் இருக்கவேண்டும். உடை ஒருவனை நல்லவனுக்கிவிடாது. வீண் ஆசையைவிட்டு நல்ல குணங்களுக்கு இருப்பிடமாக விளங்குபவனே பரிசுத்தனுவான். கவனி, ஆண்மையே போர்க்களத்தில் முக்கியமண அம்சம். கோழைக்கு இரும்புக் கவசமிருந்தென்னப் பயன்?—என்று புத்திமதி கூறினார்கள்.

நான் இதைக்கேட்டதும் அவர்களிடம் வெறுப்புக்கொள்ளவில்லை. அவர்கள் கூறுவது நியாயமாகையினால், "நீங்கள் சொல்வது நியாயம். இருந்தாலும் சில நாட்களேனும் உங்களுடன் என்னை வைத்துக்கொண்டிருந்து பார்த்து என் குணமறிந்து என்னை விலக்க விருப்பமானல் விலக்கிவிடலாம்—சேர்த்துக்கொள்ள விருப்பமானல் சேர்த்துக்கொள்ளலாம் கொஞ்சமும் கவனியாமல் சரணம் என்று வந்தவனைத் தள்ளுகிறீர்கள். இதுபற்றித்தான் வருந்துகிறேன்" என்றான்.



அவர்கள் தீயவனுடைய சேர்க்கை ஒரு நாளில் ஒரு நிமிஷமிருந்தாலும் போதும். அவன் நின்ற இடத்தில் சற்றுநேரம் நின்றுக்கொண்டிருந்து திரும்பினுலும் போதும் அவமானத்துக் காளாகும்படி நேரிடும். மதிப்புங்கெடும். பனைமரத்தின் கீழிருந்து பாலைக் குடித்தவனைக் கட்குடித்தான் என்றிகழ்வது சகஜமல்லவா? அதுபோலத்தான் துஷ்டர்களின் சமீப சல்லாபமும் பழியை விளைக்கும்" என்றனர்.

நான் வேறுபேச வழியில்லாமல் திரும்பவேண்டியதா யிருந்தபோதிலும் அவர்களுடைய பேச்சு எனக்கு நல்ல போதனையை ஊட்டியபடியால், நான் அன்றுமுதல் என்னை ஒவ்வொருவரும் நல்லவன் இவன் என மதிக்கக்கூடிய வழியில் நடக்கத் தலைப்பட்டுக் கடைசியில் ஒரு படைத்துக்கு அதிபதியாய் அப்பால் பலருக்குக் குருவுமானேன். நான் யார் தெரியுமா? சொல்ல வெட்கமாயிருக்கிறது. ஆயினும் சொல்லுகிறேன். முன்னே அந்த சாதுக்கள் கூட்டத்தோடு சேர்ந்திருந்து அவர்களையும் திருட்டுக் குற்றத்துக் குள்ளாக்கிய மோசக்காரன். மீண்டும் அவர்களை ஏமாற்றப் பார்த்தேன். அவர்கள் இடங்கொடுக்காமல் எனக்குப் புத்திமதி போதித்ததினுல், நான் அவர்களுடைய புத்திமதியையே பரம உபதேசமாகக் கொண்டு சிறப்படையலானேன். என் பெயர் தெரியவேண்டுமா உங்களுக்கு? அதைக் கேட்காதீர்கள். மானம் போய்விடும். அதைச் சொல்ல மறுத்ததற்கு என்னை மன்னியுங்கள்.

(சாதுசங்கப்பிரியன்.)

## அகஸ்திய முனிவர்

(218-ம் பக்கத் தொடர்ச்சி).

அகஸ்திய முனிவர் மேருகிரியின் சாரலிலே தவம்புரிந்துகொண்டிருக்கையில் விந்தகிரி என்கிற ஒரு மலையானது ஆகாயவழியைத் தடை செய்தது. அடைக்கவே சூரியன் முதலிய கிரகங்களும் பிறரும் துயர முற்று அகஸ்திய முனிவரை நினைத்துக் குறை கூறிக் கொண்டனர். அவர் முக்காலமு முணரவல்லவர். ஆகையினால் அவர் அதனையறிந்து, மேலே உயர்ந்த விந்தமலையை அடக்கி ஆகாயவழியை முன்போலாக்கி அக் குறையை நீக்கத் திருவுளங்கொண்டு கண்களிலே ஆநந்தபாஷ்பம் பெருக கைகளஞ்சலிக்க, மனமும் என்பும் நெக்குருக மயிர் பொடிப்பச் சிவபெருமானைத் தியானித்தார். அவர், அவர்முன்னே இடபவாகனத்தின் மேல் தோன்றி, "முனிவ, நீ விரும்பியதென்ன?" என்று வினவினார். முனிவர், சிவபெருமானை வணங்கித் துதித்து, "விந்தமலை ஆகாயவழியை அடைத்திருக்கிறது. அதன் இறுமாப்பை யடக்க நினைதருள் வேண்டும்" என்று வேண்டிக் கொண்டார். சிவபெருமான், "முனிவ, உனக்கு அந்த விந்தகிரியை அடக்க வன்மை தந்தருளினோம். செருக்கடைந்த அதனை அடக்கித் தெக்ஷிணதேயத்தை யடைந்து, பொதியமலையிலே வசித்திருப்பாய்" என்று அருளிச்செய்தார். அப்பொழுது முனிவர், சிவபெருமானைப் பார்த்து, "தேவரீரை அர்ச்சனை செய்வதற்கும் தடாகங்களிலும், குளங்களிலும் நீர் குறைவற்றிருப்பதற்கும் தென்றிசைக்கு ஒரு தீர்த்தத்தை அளித்தருளல் வேண்டும்" என்று வேண்டிக் கொண்டார். சிவபெருமான், அப்பொழுது திருக் கைலாசமலையிலுள்ள ஏழு நதிகளில் காவேரி நதியை நினைத்தார். அந்த நதி ஸ்திரீ ரூபங்கொண்டு சிவபெருமான் முன் வந்து வணங்கியது. சிவபெருமான் "நீ இந்த முனிவனோடு தென்றிசைக்குச் செல்லக்கடவாய்" என்றார். காவேரி ஸ்வாமி, இந்த முனிவன் குற்றமற்றவனாலும் ஓர் ஆடவனாகையினால் இவனோடு நான் செல்வது தகுதியாகுமா?" என்று கேட்டது. சிவபெருமான், "இந்த முனிவன் மாறுபாடில்லாத மனமுடையவன். நல்வினை, தீவினைகளால் வரும் ஆக்கம், கேடு இவைகளைச் சமமாய எண்ணுபவன். நம்முடைய அடியார்களிலே சிறந்தவன். ஆதலின் இவன் பின்னே செல்லக்கடவாய்" என்று ஆக்ஞாபித்தார்.

காவேரி, "ஸ்வாமி அடியேன் இவரை விட்டுப் பிரிவதென்று" எனக் கேட்க, சிவபெருமான், "பெண்ணே, இம்முனிவன் என்றைய தினம் உன்னைப் பார்த்துக் கைகாட்டுவானோ அன்று இவனை விட்டுப் பிரிந்து பூமியிலே செல்" என்று திருவாய் மலர்ந்தருளினார்; பின் அகஸ்திய முனிவனைப் பார்த்து, "முனிவ, இந்தக்காவேரியை உன்கமண்டலத்திலே ஏற்றுக்கொள்வாய்" என அவர் அவ்வாறே நதியைத் தமது கமண்ட

லத்திலே ஏற்றுக்கொண்டு சிவபெருமானை வணங்கி விடை கொண்டார். சிவபெருமான் அகஸ்தியருக்கு விடை தந்து மறைந்தார்.

இவ்வாறு முனிவர் புறப்பட்டு வருகையில் தாரகன் என்னும் ஓர் அசுரனுடைய நகரத்திற்குச் சமீபமாய் வந்தார். அந்த நகரத்திலிருந்த கிரவுஞ்சன் என்னும் அரக்கன் அந்த முனிவரைக் கண்டான். அவ்வரக்கன் மகா கொடியவன்; வஞ்சகன்; அவன் வானுலகத்தை நிலவுலகமாக்குவான்; நிலவுலகத்தை வானுலகமாக்குவான்; கடலை மலையாக்குவான்; மலையைக் கடலாக்குவான்; சூரியனைச் சந்திரனாக்குவான்; சந்திரனைச் சூரியனாக்குவான்; அணுவை மேருவாக்குவான்; மேருவை அணுவாக்குவான். இப்படி பல மாயங்களை யெல்லாம் செய்வான். தேவர்களையும் முனிவர்களையும் கண்டால் விடமாட்டான்; தன் மாயைக் குள்ளாக்குவான்.

அந்த அரக்கன் அகஸ்திய முனிவருடைய வருகையை அறிந்து அவர் வரும் வழியிலே பல சிகரங்களை யுடைய ஒரு பெரிய மலையாய்த் தோன்றினான். அதனுள் பிரவேசித்துச் செலல ஒரு வழியினையும் அம்மலை யுடையதா யிருந்தது. அகஸ்தியர் ஆங்குற்றதும் அவ்வழியிலே நுழைந்து சென்றார். அது கூப்பிடுதூரம் கழிந்தபின் அவ்வழி இல்லாதொழிந்தது. அங்கே வேறொரு வழி தோன்றியது. அகஸ்தியர் அவ்வழி பற்றிச் சென்றார். அதுவும் சிறிது தூரத்திற்கப்பால்



இல்லாதொழிந்தது. பின் முனிவர் திரும்பினார். அந்த வழியும் தென்படவில்லை. பின் முனிவர் மயங்கினார். அப்போது பிறிதொரு வழி தென்பட்டது. அவ்வழி பற்றிச் சென்றார். கொஞ்ச தூரம் போனதும் அங்கே இருட்படலஞ் சூழ்ந்தது! சுழல் காற்று வீசியது! மழை பெய்தது! இடி இடித்தது! இதைக் கண்ட முனிவர் நின்று சிந்தித்து, “ஓ கொடியவர்களாகிய அவுணர்களுடைய வஞ்சனை” எனவறிந்து, அக்கினியைப்போல் சினங்கொண்டு, கையோடு கைதட்டி நகைத்து, நல்லது “இவ்வரக்கன் அகந்தையை அடக்குகிறேன்” என்று அம்மலையைத் தமது திருக்கரத்தினால் குத்தி அது புழுதியாம்படி செய்து “நல்லறிவில்லாத கொடிய அசுரனே, நீ உன் பழைய வடிவம் நீங்கி, இந்த மலை வடிவமாக இங்கே கிட! பின்னால் குமாரக்கடவுளுடைய வேற்படையினால் நீ உயிரை இழக்கக் கடவாய்” என்று சாபங் கொடுத்து, கமண்டலத்திலுள்ள நீரை, அள்ளி மந்திரத்தோடு தெளித்து அவன் மாயத்தைக் கெடுத்துத் தென்றிசையை நோக்கி நடந்தார். (வரும்).

## நாரயயணன் என்பதன் பொருள்

நீரை நாரம் என்று முனிவர் கூறுகின்றார் அந்த நாரம் முதலில் நாராயணனுக்கு அயனம் (இடம்) ஆக இருந்தது அதனால் நாரம்+அயனம்=நாராயணம்—அது நாராயணன், எனவாயிற்று.

## விவேகாநந்தரும் விக்ரகாராதனையும்

ஸ்ரீ விவேகாநந்த சுவாமிகள் ஒரு காலத்தில் ஓர் அரசனிடம் சம்பாஷித்துக் கொண்டிருந்தார் அவரைச் சுற்றிலும் அவ்வாஸ்தானத்தைச் சேர்ந்த மந்திரி முதலிய உத்தியோகஸ்தர் பலர் உட்கார்ந்து அச்சம்பாஷணையைக் கவனித்து வந்தனர். அரசனிடம் பேசிக்கொண்டிருந்த சுவாமிகள் அவ்வறையின் சுவர்களில தொங்கவிடப்பட்டிருந்த கண்களைக் கவரத்தக்க அழகிய படங்களைப் பார்த்துக் கொண்டிருக்கையில் அப்படங்களில் ஒன்று தம் குருநாதராகிய ஸ்ரீராமகிஷ்ண பரமஹம்சருடைய படமாயிருக்கக் கண்டார். கண்டவளவில் இருகரங்களையும் சிரமேற் கூப்பி 'ராம கிருஷ்ண' என்றார். அப்பொழுது அரசன் சுவாமிகளைப் பார்த்து 'சுவாமிகள் சந்யாசியாகவிருந்தும் சொரூபபூஜை செய்கின்றீர்களே! வெறும் படத்தைக் கண்டு பூசித்தல் பொருந்துமோ?'' என்று வினவ, அதற்கொன்றும் விடைபகராமல் சிரித்துக்கொண்டே சுவாமிகள் மேலும் அவ்வரசனுடன் சம்பாஷித்து வந்தார். சிறிது நேரஞ்சென்றதும் அங்கோரிடத்திலிருந்த அவ்வரசனது படத்தைக் கண்டு அதனை எடுத்துத் தரும்படி அங்கிருந்த மந்திரியைக் கேட்டார். அவ்வாறே கொடுக்கப் பெற்றதும் சுவாமிகள் அதனைக் கையிற் பற்றிக்கொண்டு மந்திரியை நோக்கி 'மந்திரியாரே தயவுசெய்து இப்படத்தின்மேல் எச்சில் துப்புங்கள்' என்றார். மந்திரி அவ்வார்த்தையைக் கேட்டதும் திடுக்கிட்டு மிகப்பயந்தவனாய் 'இதென்ன, இவர் இங்ஙனம் இயம்புகின்றனர்! இது நம்மரசன் படமல்லவா? இதன்மேல் துப்புவதெப்படி?' எனத்திகைத்தான். சுவாமிகள் மற்றொருவனைப் பார்த்து அவ்வாறே கூறினார். அவனும் இசையவில்லை. இவ்வாறு பலரைக் கேட்டும் ஒருவனாவது அதற்குச் சம்மதிக்கவில்லை. அப்பொழுது அரசன் நகைத்துக் கொண்டே 'என்ன சுவாமிகளே! என் குடையின் கீழ் வாழும் குடிகளாகிய இவர்கள் என் படத்தின்மேல், அதுவும் 'என் எதிரிலேயே எச்சிற் றுப்ப இசைவரோ?' என்றான். விவேகாநந்தர், 'ஏன்! உமிழ்ந்தா லென்ன? இது அரசனல்லவே! இதிலிருப்பதெல்லாம் கூடி சிறு காகிதமும் சிறிது மசியுந்தானே! இதன்மேல் உமிழ்ந்தால் குற்றம் என்ன?' என்றார் அரசன் சிறிது திகைத்துவிடை யிறுக்கத் தோன்றாமல் 'இருந்தாலும், இது என் படமல்லவா? இதிலிருப்பது என் உருவமல்லவா?' என்றான். சுவாமிகள் மன்னனைப் பார்த்து அரசே! இதுதான் சொரூப பூஜை என்பது. உம்மைப் போலவே நானும் சொரூப பூஜையை வெறுக்கிறேனாயினும், யோசிக்குமிடத்து சொரூப பூஜை செய்யாமலியலாது' என்றார்.

நியாயந்தானே, எது வரையில் ஈசுவரன் வேறாயிருக்கிறான் என்றெண்ணி அவரைக் கூப்பிட்டுக் கொண்டிருக்கின்றோமோ, எது வரையில் 'நான்

எனது' என்பவை நம்மைவிட்டகலாம லிருக்குமோ, எது வரையில் மனம் நாமரூபங்களைப்பற்றி நிற்கிறதோ அது வரையில் விக்கிரகாராதனை இருந்தே தீரவேண்டியிருக்கிறது. முன்னரும் பன்முறை சொன்னவாறு மனத்தை நிறுத்திப் பழகுவதற்கு விக்கிரகாராதனையினும் சிறந்த உபாயம் பிரிதின்று என்பதே ஆன்றோர் துணிபாம். சில அனுபவமற்ற விதண்டாவாதிகள் கூறுவதுபோல விக்கிரகாராதனை செய்வோர் அவ்வுருவத்தைக் கல்லென்றேனும் செம்பென்றேனும் மதித்து வணங்குகின்றார்களில்லை. 'கல்லே! உன்னை வணங்குகின்றேன். செம்பே! உன்னைத் துதிக்கின்றேன்' எனக் கூறுகின்றாரில்லை. அங்கு கடவுள் என்னும் உணர்ச்சியொன்றே அவர்கள் மனதில் வேரூன்றி நிற்கின்றதென்பதை 'கல்லையும் செம்பையும் கும்பிடுகின்றனர்' என்போர் அறிதல் வேண்டும். இங்கு ஒரு விஷயம் கவனிக்கத் தக்கதாம். அஃதியாதெனில்:

ஓரிடத்தில் மரத்தானாக்கப்பட்ட யானை யொன்றிருக்கின்றது. அதனைப் பார்க்கத் தனித்தனியாக இருவர் சென்றனர். முதலிற் சென்றவன் அதைப் பார்த்து "இவ்வானை எவ்வளவு பயங்கரமாக விருக்கிறது. இதன் வாலும் துதிக்கையும் தந்தங்களும் எப்படி யிருக்கின்றன" என்றிவ்வாறு அதனை யானையாகவே யெண்ணிப் பேசுகிறான். மற்றொருவன் தச்சன். அதனால் அவன் அவ்வுருவத்தைக் கண்டதும் 'இது என்ன மரத்தால் செய்யப்பட்டது' என்று தட்டிப் பார்க்கிறான். அவன் அதனை மரமாகக் காண்கிறான். இவ்விருவருள் யானை



யாகக் காண்பவனுக்கு மரம் தெரிகிறதில்லை; மரமாகக் காண்பவனுக்கு யானை தெரிகிறதில்லை. இது ஓர் உபமானக் கதை. அதுபோல, ஆலயத்திற் சென்றுக் கடவுளை வணங்க வேண்டும் என்னும் எண்ணத்தோடு செல்கிறவன் ஆங்கிருக்கும் சிலாவிக்கிரகத்தைச் சிலையாகப் பாவிக்காமல் பகவானாகவே பாவிக்கின்றான். கண்ணுக்கினிமையாக அலங்கரிக்கப்பட்ட அவ்விக்கிரகத்தினிடத்து அழகுள்ள பொருள்களைக் காண்பதிலேயே ஆர்வமுடையதாகிய மனமானது அழுந்திப் பாய்ந்து ஒவ்வொரு உருப்பையும் கண்டுக் கண்டு உவகைமிக்குப் பற்றுதலுடையதாகின்றது. 'ஆ! ஆ! ஆண்டவன் எவ்வளவு அழகாய் யிருக்கிறார். கருணைத் ததும்பும் வதனம். குனித்த புருவம், கொவ்வைச் செவ்வாய், பச்சை மலை போல் மேனி, கமலச் செங்கண்' என்றிவ்வாறு அவ்வழகி லீடுபட்ட மனம் அவ்விக்ரக வடிவத்தை ஆகர்ஷித்து அச்சடித்தாற்போல் தன்னகத்தில் அழுந்தப் பதித்துக்கொள்ளுகின்றது. அப்பொழுது ஆநந்த பரவசனாய்த் தன்னிரு கண்களையும் மூடிக்கொண்டு கடவுளைத் துதிக்கிறான். இங்குதான் விக்கிரகாராதனையின் தத்துவம் நன்கு விளங்குகின்றது. எங்ஙனமெனில்:

மேலே காட்டிய வண்ணம் கடவுட் சன்னிதானத்தில் நின்று வணங்கும் பக்தன், விக்கிரகவடிவம் தன் மனத்திற் பதிந்தவுடன் தன் கண்களிரண்டையும் மூடிக்கொண்டு தன் பார்வையையும் மனத்தையும் உள்முகப் படுத்தி புறத்திற் கண்ட வுருவத்தை யகத்திற் காண்டல் வேண்டும். அங்ஙனம் காணுங்கால், மனத்தை விஷ

யாதிகளிற் செல்லாவாறு தடுத்து அகத்திற் காணும் அத்திவ்வியாலங்கார மங்கள விக்கிரக சொரூபத்தின் பாதங்களில் மதுவுண்ணும் வண்டு மலரிற் படிந்திருப்பது போல அதை அசைவற நிறுத்துதல் வேண்டும்.

(இவ்வாறு அகத்தில் விக்கிரகத்தைத் தாபிக்கும் போது அதன் திருமுடி இருதயத்தினிடத்தும் திருவடி நாபியினிடத்தும் அமைந்திருக்கும் என்பது தானாகவே விளங்கும். யோகாப்யாசிகளும் ஞானாப்பியாசிகளும் அப்பியாச காலத்தில் தம்மனத்தை நாபியினிடத்தே அழுந்த நிறுத்தல் வேண்டுமென்பது அவற்றில் அனுபவமுடையோரனைவரும் அறிந்த விஷயமாம். ஆகவே, இவ்விக்கிரகாராதனையின் அமைப்பும் பலனும் இன்னதென்பதை நேயர்கள் இதனால் எளிதில் அறிந்துக் கொள்ளலாம்).

அவ்வாறு நிறுத்தும்போது மற்றுமோர் விஷயம் கவனிக்கப்படுதல் வேண்டும். அதாவது, வாய் அப்பகவானது திருநாமங்களி லொன்றை உச்சரித்துக்கொண்டிருத்தல் வேண்டும். அது (உச்சரிக்கும் சொல்) சில எழுத்துக்களால் (அக்ஷரங்களால்) ஆகிய சிறு பதமாயிருத்தல் வேண்டும். அப்போதுதான் மனத்தின் சகாயத்தை வேண்டாமலே வாய் அதனை உச்சரித்தல் கூடும். பெரிய பாடல்களா யிருப்பின் மனத்தின் உதவியின்றி வாய் கூறாது. அப்பொழுது மனம் மேற்சொன்ன லட்சியத்தில் நிலைத்திராமல் பாட்டைச் சென்று பற்றும், இதுபற்றியே பஞ்சாட்சரம் (ஐந்து எழுத்துக்கள்), ஷடாட்சரம் (ஆறு எழுத்துக்கள்)



அஷ்டாட்சரம் (எட்டெழுத்துக்கள்) முதலிய சிறு பதங்களாக மந்திரங்கள் அமைக்கப் பெற்றுள்ளன. இன்றேல் சிவ சிவ, நாராயண நாராயண, கோவிந்த கோவிந்த, என்பனபோன்ற திருநாமங்களில் எதையேனும் ஒன்றினை உச்சரிக்கலாம். அவ்வாறு உச்சரிக்கும் போது உரத்த சப்தத்தோடு உச்சரிக்காமல் தன் காதிற்குமாத்திரம் கேட்கும்படியாக உச்சரித்தல் உசிதமாம். செவி அதனையே கேட்டுக்கொண்டிருத்தல் வேண்டும்.

[புலன்களிற் செல்லும் பொறிகளுள் முக்கியமானவையாகிய கண், காது, வாய், இம்மூன்றும் அடங்கு முபாயம் அமைந்திருத்தலை அன்பர்கள் கவனித்தல் வேண்டும். மனம் திருவடியில் (நாபியினிடத்து) நிலைத்து நிற்கிறது. கண் உண்ணோக்கிக் காண்கிறது. வாய் பகவந்நாம ஸ்மரணை செய்கிறது. செவி அதனைக் கேட்கிறது. அன்பர்களே! இந்த நிலை எத்தகையதென்பதை அனுபவிகளுக்கு அறையவேண்டுவதில்லையாகலின் அறியாதார் அனுஷ்டித்துக் காண்பார்களாக.]

மனம் லட்சியத்தில் ஆழ்ந்து பதியுங்கால் அவனையும் (பக்தனையும்) அறியாமலே அவ்வுருவம் மறைந்துவிடும். வாயும் மந்திரத்தை மெல்ல நழுவவிட்டு மௌனமடையும். ஆனால் மனம் முன் எந்த நிலையில் நிறுத்தப்பட்டதோ அவ்விடத்திலேதானே அசைவற நின்று சொரூபமற்று லயித்துவிடும். மீண்டும் அது வெளிக் கிளம்பும்போது அவன் அதனை அப்படியே

வெளிப்பாயவிடாமல், மறுமடியும் அந்த விக்கிரக சொரூபத்தை அகத்தில் தாபித்துக் கொண்டு முன் போலவே செய்கிறான். இவ்வாறு பலகாலும் செய்யும் அப்பியாச முதிர்ச்சியால் மனம் ஏகாக்கிரக தன்மையெய்தி தனது யதார்த்த சொரூபத்தில் நிலைத்திருத்தலை எளிதிலடையும் என்பதை இயம்பவும் வேண்டுமோ? (ஆனந்தபோதினி.)

---

### நால்வரின் வயது நிர்ணயம்

அப்பருக்கெண் பத்தொன் றருள்வாத வூரருக்குச்
செப்பியநா லெட்டிலே தெய்வீகம்—இப்புவியில்
சுந்தரர்க்கு மூவாறு தொல்ஞான சம்பந்தர்க்
கந்தம் பதினா றறி

### தென்னைமரப் பிள்ளையார்.

புதுச்சேரி முல்லா வீதியில் மீரார் பள்ளிவாசல் தோட்டத்தில் ஒரு தென்னை மரத்தின் உச்சியில் விநாயகர் உருவம் ஒன்று அதன் இயற்கை அமைப்பிலேயே உண்டாயிருக்கிறதாம். இது காலஞ்சென்ற மீராவின் தெய்வீகமான அப்பக்கத்தார் ள் போற்றுகின்றனராம். அம்மனிதன் பெயர் கான் சாஹெப் அவுலியா என்பதாம். அத் தோட்டம் அவரால் நோய் நீங்கப்பெற்ற ஒரு யாதவச் செல்வவந்தர் 200 வருஷங்களுக்கு முன் தானம் செய்ததாம். அத் தென்னை மரம் சுமார் நான்கடி உயரம் இருக்கிறதாம்.

## அசுத்தமான ஜலத்தினால் ஏற்படக்கூடிய கேடுகள்.

ஜலத்தில் காணப்படும் அசுத்தமான பதார்த்தங்களை உலோக சம்பந்தமானவை யென்றும், உலோக சம்பந்த மில்லாதவை யென்றும் இரண்டு பிரிவுகளாக வகுக்கலாம். உலோக சம்பந்தமான பதார்த்தங்கள் ஜலத்தில் கரைந்து விடுவதால் சரீரத்திற்கு அவைகளால் உபாதை ஏற்படுவதில்லை. உலோக சம்பந்தமில்லாத பதார்த்தங்கள் ஜலத்தில் மிதந்துகொண்டும், அமிழ்ந்து மிருக்கின்றன. ஆகவே ஜலத்திலுள்ள அசுத்தங்களை ஜலத்தில் கரைந்தவை யென்றும் ஜலத்தில் மிதந்துகொண்டிருப்பவை யென்றும் இரு கூறுகளாக வகுக்கலாம். உலோக சம்பந்தம்மில்லாத பதார்த்தங்களென்பதில் எச்சல், வாந்தி, மூத்திரம், மயிர், சரீர சர்மத்தின் அணுக்கள், சீழ், பலவகைப்பட்ட புழுக்களின் முட்டைகள், அழுகிப்போன இலைகள், பஞ்சு, கிருமிகள் முதலியவைகள் அடங்கி யிருக்கின்றன.

ஜலமானது எந்த வழியாக வருகிறதோ அந்த இடத்திலுள்ள மேலே கண்ட பதார்த்தங்கள் ஜலத்தில் வந்து சேர்ந்து கொள்ளுகின்றன. கற்பாங்கான பூமியின் வழியாக வரும் ஜலத்தில் அதிகமாக அசுத்தங்கள் சேருவதில்லை. களிப்பாங்கான பிரதேச வழியாக வரும் ஜலத்தில் மேலேகண்ட அசுத்தங்கள் சேருகின்

றன. கிராமாந்தாரங்களிலுள்ள குளங்களின் ஜலத்தி லும், ஆழமில்லாத கிணறுகளின் ஜலத்திலும் மனிதர் கள், மிருகங்கள் இவைகளுடைய மூத்திர உப்பும், குடல் நோய்களை உண்டுபண்ணக் கூடிய கிருமிகளும் கலந்திருக்கின்றன. அந்த அசுத்த பதார்த்தங்கள் ஜலத் தில் சம்பந்தப்படுவதற்குக் காரணங்களாவன:—

1. குளங்களிலும், படிக்கிணறுகளிலும் மனி தர்கள் இறங்கி ஸ்நானம் செய்து ஆடைகளைத் துவை ப்பதினாலும், கால் நடைகளைக் குளிப்பாட்டுவதினாலும், பாத்திரங்களைத் தேய்ப்பதாலும், சரீரத்திலுள்ள வியர்வை, அழுக்கு, சீழ், புண்களிலுள்ள ரத்தம் முத லியவைகள் ஜலத்தில் சம்பந்தப்பட்டு விடுகின்றன.

2. கிணறுகளுக் கருகாமையிலும், குளக்கரை களிலும் உள்ள அசுத்த பதார்த்தங்கள் காற்றினால் ஜலத்தில் போய்ச்சேர்ந்து விடுகின்றன.

3. அழுக்கடைந்த தரைகளிலும், பிணியாளர் களுடைய பாத ஸ்பரிசமேற்பட்ட இடங்களிலும் கிடந்து புரளும் கயிறுகளின் மூலமாகக் கிணறுகளி லிருந்து ஜலத்தை இழுப்பதினாலும், கிணறுகளுக்குள் கிருமிகளும் அழுக்கும் சேர்ந்துள்ள பாத்திரங்களைப் போடுவதினாலும் அசுத்த பதார்த்தங்கள் கிணற்று ஜலத்தில் சேர்ந்துவிடுகின்றன.

4. கிணறுகள், குளங்கள், முதலியவைகளுக் கருகாமையில் குப்பைகளையும், சாணியையும் குவித்து



வைத்திருப்பதினால் ஜலம் அசுத்தமடைந்து விடு கிறது.

5. ஆற்றுமணலிலும், குளக்கரைகளிலும், கிண றுகளுக் கருகாமையிலும் மலபாதையை நிவர்த்தி செய்துகொண்டு, அந்த ஜலத்திலேயே சுத்தம் செய்து கொள்ளும் அருவருக்கத் தக்கதும், அநாகரீகமானது மான துரப்பியாசத்தால் ஜலம் அசுத்தமடைந்து விடு கிறது.

6. ஆற்றுமணலிலும், ஆற்றுப் படுகைகளிலும், ஜலாதாரங்களுக் கருகாமையிலும், பிரேதங்களைத் தக னம் செய்வதாலும், புதைப்பதாலும் ஜலம் அசுத்த மடைந்து விடுகிறது.

7. கிணறுகளிலும், குளங்களிலும் மரங்களை யும், நார்மட்டைகளையும் ஊறவைப்பதினாலும் ஜலம் அசுத்தமடைந்து விடுகிறது.

8. குடி தண்ணீரில் சுகசரீரிகள், வியாதிஸ் தர்கள் என்கின்ற வித்தியாசமின்றி எல்லோரும் பழகு வதால் ஜலம் கெட்டுப் போய்விடுகிறது.

9. குடி ஜலாதாரங்களுக் கருகாமையில் கக்கூஸ் களை வைத்திருப்பதினாலும், சாக்கடை ஜலத்தை வடிய விடுவதினாலும், குப்பைகளைக் குவித்துவைப்பதினாலும் குடி தண்ணீர் கெட்டுப்போய்விடுகிறது.

(ஆரோக்கிய தீபிகை.

# உலகப்போக்கு

நீண்டகாலமாய் ஒருவன் நல்ல குணங்களையே மேற்கொண்டவனாயிருந்து உலகத்தில் இதுசம்மந்தமாய்ப் பேரும் புகழும் பெற்று நல்லவாழ்வையடைந்திருந்தாலும், ஒருசமயம் அவனிடம் ஏதாவது சந்தர்ப்பபேதத்தினால் பிறர் குற்றங்கூறத்தக்க குறைகள் ஏற்படுமானால் அது அக்கணமே உலகமுழுவதும் பரவி அவனை அவமானமென்கிற படுகுழியில் வீழ்த்துகிறது. நல்லகுலத்திற் பிறந்தவனாய் இருந்து அவனிடம் ஒரு சிறு குறை கண்டாலும் அவ்வாறே அவன் அவமதிப்படைகிறான். உயர் பதவியிலிருந்து அவனிடம் குறை ஏற்பட்டாலும் அவனும் அவமதிப்படைகிறான். ஆனால் இழி குணமுடையவனிடமேனும் இழி குலத்தினனிடமேனும் எந்தக்குற்றம் ஏற்பட்டாலும் அது உலகத்திற் பிரஸ்தாபிக்கப் படுவதில்லை. அது அவர்களுக்கு அவமானத்திற்கு இடமாக முடிவதுமில்லை. காரணம் சந்திரனிடமுள்ள களங்கம் போல் மற்ற இடங்களிலுள்ள களங்கம் கண்ணுக்கு விளங்குவதில்லை யல்லவா? வெள்ளை ஆடையிற்படும் கறை தெரிவதுபோல் அழுக்காடையிற்படும் கறைதெரிகிறதில்லை யல்லவா? பனிநீர் நிறைந்த குடமொன்றில் நாய்விழுமானால் பனிநீர் கெட்டுப்போவது சகஜமல்லவா?—ஆதலால் குலத்திற் பெரியவனென்பவனும் குணத்திற் பெரியவனென்பவனும் எப்போதும் சர்வஜாக்கிரதையா யிருக்க வேண்டும். தூய ஆடை புனைந்தவன் எப்படி அசுத்தமான இடத்தில் உட்காரவும் அசுத்தத்தை நெருங்கவும் அஞ்சுகிறானோ அதுபோல் குலநலமமைந்தவனும் குணநல மமைந்தவனும் தீயசெய்கைகளிலும் தீயபழக்கத்திலும் அச்சம் வைக்கவேண்டும். நாணமும் அச்சமும்—அதாவது "இந்தத் தீயசெய்கை செய்வது வெட்கக்கேடாக வல்லவா வந்துமுடியும்" என்றெண்ணி அதனைச் செய்வதில் நாணமும் "இந்தத்தீயசெய்கைசெய்வதினால் பழியும்பாவமுமல்லவா சூழும்" என்றெண்ணி அதனைச் செய்வதில் அச்சமும், கொள்வது குலநலமும் குணநலமும் அமையப்பெற்ற சீரியரிடம் விளங்கும் இலட்சணங்களாகும். ஆனால், குலநலமும குணநலமும் அமையப்பெறாத பூரியர்க்கு நாணமும் அச்சமும் இரா. தெரியாமலா—பெரியார் "அச்சமும் நாணமும் அறிவிலார்க்கில்லை"—என்று கூறினார்கள்.

இப்பொழுது இதற்கிணங்க ஜூன்மாதப் பத்திரிகைகளில் "ஒரு பிராமணன் பறச்சியை மணந்து கொண்ட புதுமை"—என்ற வர்த்தமானம் ஒன்று வெளிவந்துள்ளது. இது பிராமணனல்லாதாரிடம் ஏற்பட்டிருக்குமாயின் இவ்வளவு தூரம் வெளிவந்திராது. சகஜமாய்ப் போயிருக்கும், உயர்ந்த ஜாதியினனென்றும் ஆசாரங்களை மேற்கொண்டவனென்றும் பேர்வைத்துக் கொண்டுள்ள பிராமணன் செய்த செய்கையாகையினால் இது பறைமுழக்கம்போல் ஊரெங்கும் பரவிவிட்டது. இந்த விவாகம் ஒருவரையொருவர் நேசித்ததின்பேரி

லேற்பட்டதா—இல்லை பெற்றோர் மனமொத்து மணம் பேசித் தீர்மானித்ததன் பேரில் ஏற்பட்டதா—இல்லை. ஜாதி மதபேதமில்லாமலிருக்க வேண்டுமென்கிற கூக்குரல் எங்கும் கேட்கப்படுகிறதல்லவா? அந்த நாகரிகத்தைப் பரப்பவேண்டுமென்கிற உணர்ச்சி யுண்டானதின் பேரில் ஏற்பட்டதா—இவைகளில் எது காரணமாயிருந்தது? ஒன்றும் விளங்கவில்லை. ஆனால் பத்திரிகைகளில் சில இந்த விவாகத்தைப் போற்றுகின்றன. அப்படி போற்றுவது காலவிபரீதத்தினா லேற்பட்ட பேதபுத்தியினாலென்றே பெரியார் கொள்வர். கலியுகத்தில் இன்னும் எவ்வளவோ விநோதங்கள் நடைபெறுமென்று நமது புராணங்களும் சாஸ்திரங்களும் முறையிடுகின்றன. பெரியார்களும் கூறுகின்றனர். ஆகையினால் இது கண்டு வியப்பும் சந்தோஷமும் கொள்பவர் பின்னால் ஒருசமயம் துக்கமும் அடைவார்கள் என்பது திண்ணம். தக்க காரணமின்றி ஒரு பெரியசெய்கை நிகழ்ந்ததென்பதை நாம் ஊகிப்போமானால் உண்மைவிளங்கும். விசாரித்ததில் பாப்பான் பறச்சியை இச்சித்தது அவளிடம் நேசம் கொண்டானென்றும் அப்படி நேசித்ததை யறிந்த பறையர்கள் அவனைப்பிடித்து நையப்புடைக்க ஆரம்பித்தபோது அவன் எல்லோரும் அறிய அப்பெண்ணைக் கல்யாணம் செய்துகொள்கிறேன் என்று கூறியதாகவும் அதன்படியே நடந்தானென்றும் கேள்விப்படுகிறோம். உண்மையை ஈசனே அறிவான்.(பாபுசாமிராவ்.)

## ஓர் யோக்யன்

பெருங்காயம் வைத்துள்ள பாத்திரத்தில் பெருங்காயமில்லாத போதும் அதன் வாசனை வீசும். அதுபோல்—பெரியார் வறியவரான காலத்தும் தங்களாலியன்ற உதவி தங்களை அடுத்தவர்க்குச் செய்தே அனுப்புவர். இதனை:—

"ஆற்றுப் பெருக்கற் றடிசுடுமந் நாளும் அவ்வா
றூற்றுப் பெருக்கால் உலகூட்டும்—ஏற்ற
நல்ல குடிப்பிறந்தார் நல்கூர்ந்தாரானாலும்
இல்லையெனமாட்டார் இசைந்து"

என்று பெரியார் கூறியுள்ள பாடல் நன்றாய் விளக்குகிறபடியால் எக்காலத்தும் எந்த ஓர் தாழ்வான நிலையிலும் எவனும் தன்னை யடுத்தவர்க்குத் தன்னாலியன்ற உதவியைச் செய்யாம லிருப்பது கூடாது. செய்தே தீரவேண்டும்; செய்யவில்லையானால்—அவன் பகுத்தறிவுடைய மனிதனாகமாட்டான். சில பணக்காரர்கள் தங்களிடம் வந்து யாசிக்கும் ரோகிகளை வெறுத்துக் கடுகடுத்த முகம் காட்டி அவன் மனம் நோகச் செய்கிறார்கள். இப்படிப்பட்ட பிரபுக்கள் மலிந்துள்ள இக்காலத்தில் யாசகர்கள் ஜாக்ரதையா யிருக்கவேண்டும். ஜாக்ரதையா யிருப்பதாவது-கூடியவரையில் ஏதேனும் ஒரு தொழிலைத் தேடிக்கொண்டு அதன் வருவாயில்

குக்ஷி பாதையைத் தீர்த்துக்கொள்ள முயல்வதேயாகும்.

இக்காலத்தில்—எந்தத் தொழிலிலும் கௌரவமில்லாமல் போய்விட்டபடியால் கூடியவரையில், பொய் பித்தலாட்டங்கள் பேசவும் செய்யவும் இடமிராத தொழிலைத் தேடிக்கொள்ள வேண்டும். அது சிறு தொழிலா யிருந்தாலும் அல்லது தாழ்ந்த தொழிலா யிருந்தாலும்—அதனைச் செய்ய மனதில் வெட்கம் கொள்வது கூடாது. அப்படி வெட்கப்படுகிறவன் பிறரிடம் போய் யாசிப்பதை மேற்கொள்வது புத்திசாலித் தனமாகுமா? ஆகாதல்லவா? ஏதேனும் ஒரு தொழில் செய்து ஜீவிப்பவனை உலகம் இகழாது. ஏதோ செய்வது அற்பத் தொழிலா யிருந்தாலும் அதில் ஒழுங்காய் நடந்து வருவதால் இவன் மரியாதைக் குரியவனே ஆவான்—என்று பேசிக்கொள்ளும். செய்யும் தொழில் மாத்திரம் பெரிதா யிருந்து அதாவது பல வேலை யாட்களைத் தனக்குக் கீழே வைத்துப் பரிபாலிக்கத் தக்க பெருமையுடையதா யிருந்து ஒழுங்கான வழியில் நடவாமற் போனால் உலகம் அவனிடம் மரியாதை பாராட்டுமா? பாராட்டாது? ஆகையினால், காலத்தை அநுசரித்துத் தனக்குத் தகுதியான ஒரு தொழிலில் முயற்சி செய்து பொருள் தேடி வாழ்வதே பெருமையாகும். இதனைச் சென்னையில், வண்ணான் தொழிலை மேற்கொண்ட ஒருவனிடம் நான் கண்டு மகிழ்ந்ததுண்டு.



சென்னை, ராயப்பேட்டைப் போஸ்டைச் சேர்ந்த பைக்ராப்ட்ஸ் ரோட்டில், வண்ணான் கடைகள் நாலைந்துண்டு. அவற்றில் ஒன்றில் நான் ஒரு நாள் மாலையில் சற்றுநின்று பேச நேர்ந்தது. அந்த வண்ணான் கடைக்குச் சொந்தக்காரன் பத்து வருஷத்துக்கு முன் திருநெல்வேலியில் சிறந்த முதலாளியாயும், யோக்கியனாயுமிருந்த ஓர் உயர்ந்த குலத்தானெனத் தெரியவந்தது. உயர்ந்த குலத்தானாகிய நீ வண்ணான் கடைவைக்க நேர்ந்த காரணமென்னவென்று வினவினேன்; அவன், ‘ஐயா, அந்த வரலாறு கேட்க வெகு விநோதமாயிருக்கும். சற்று உட்காரச் சாவகாசமிருக்குமானால் சொல்லுகிறேன். உங்களைப் பார்க்கும் போது உங்களிடம் பேச அவாவுண்டாகிறது'' என்றான்.

‘‘அவ்வாறே நானும் உன்னோடு பேசப் பிரியப்படுகிறேன். முதற் காரணம்—நீ வேளாள ஜாதியானைப் போல் நடையுடை பாவனையில் விளங்குவதுமல்லாமல் நீதிக்கும் மரியாதைக்கும் கட்டுப்பட்டு இனிய மொழிகளை உபயோகித்துச் சம்பாஷிக்கும் உன்னுடைய சாமர்த்தியமேயாகும். இரண்டாவது காரணம் நீ உன் குடுமியை க்ராப் செய்து கொள்ளாமல் பண்டைக்காலத்து நம்மவர் வழக்கப்படி அமைத்துக்கொண்டு நெற்றிக்கும் வைத்துக்கொண்டிருப்பதேயாம்'' எனக் கூறி “என்ன செய்வேன் உன்னோடு பேசச் சாவகாசமில்லையே, நாளை இந்நேரத்துக்கு வருகிறேன்; நீ உன்வரலாறு சொல்லவேண்டும்'' என்று தெரிவித்து நான் அவ்விடத்

தை விட்டுப்புறப்பட யத்தனித்தேன், அப்பொழுது ஒரு பெரியமழை சடசடவென்று அடிக்கத் தொடங்கியபடியால் நான் கவனிக்கவேண்டிய வேலையை மறந்து, அவ்விடத்திலேயே உட்கார்ந்து "அப்பா! உன் வரலாறு சொல்லு. அதனைக்கேட்ட பின்பு சொல்லவேண்டுமென்பது கடவுளுடைய ஆக்ஞையென்று இந்த மழை குறிப்பிடுகிறது. சொல் கேட்போம்" என்றேன்.

இப்படி நான் கேட்டபோது ஒரு பெண்பிள்ளை கடைப்பக்கம் வந்து மழைக்கு ஒண்டினாள்; அவன் "ஐயா, இப்போது நாம் பேசுவதற்கில்லை. இந்தப் பெண்பிள்ளைக்கு முன் பேசத்தக்கதல்ல அது" என. ஆங்கில பாஷையில் சொன்னான்.

நான் இவனுக்கு ஆங்கிலமும் தெரிகிறதே—என வியந்து "உனக்கு இங்கிலீஷ் தெரியும்போலிருக்கிறதே; நீ இங்கிலீஷிலேயே பேசு, நான் தெரிந்துகொள்வேன்" என்று ஆங்கிலத்திலேயே பதிற் கூறினேன்.

அவன் "ஓ! அப்படியா, நல்லது" என்று கூறி உவந்து ஐயா! நான், ஜாதியில் வேளாளன். என்பெயர் சொல்ல விருப்பமில்லை—ஊர் திருநல்வேலி—எனக்கு நான்கு பிள்ளைகளும், மூன்று பெண்களும் இருக்கிறார்கள். என் மனைவியுமிருக்கிறாள். எனக்கு வயது அறுபதாகப் போகிறது. நானாகத் தேடிய சொத்தும் முப்பதாயிரத்துக்குண்டு. எனக்குப் பிதிரார்ஜிதமாகக் கிடைத்தது இருபதாயிரத்துக்குண்டு. நான் சர்க்கரை வியா



பாரம் செய்து பெரும் பொருள் தேடினேன். என் பிள்ளைகள் நால்வரையும் நான் ஆங்கிலக் கலாசாலையில் படிக்க வைத்தேன். நால்வரும் தக்க உத்தியோகத்திலிருக்கிறார்கள். பெண்கள் மூவரும் நல்லநிலைமையாயிருக்கிறார்கள். ஆனால் என் மனைவி என் மானங் கெடும்படி ஒருதீய செய்கை செய்தாள். அந்தத் தீய செய்கையே என்னை என் வீட்டைவிட்டு வெளியேறும்படி செய்துவிட்டது. சுபாவத்திலேயே அவள் கெட்டகுணமுடையவள். நான் நயத்திலும் பயத்திலும் அவளை வழிக்குக் கொண்டுவந்து, என் வாழ்வை ஒரு வகையில் கௌரவமாகவே நடத்தி வந்தேன். உள்ளிப் பூண்டானது, சம்பாரத்தோடு சேர்க்கப் படினும் தன்வாசனையை வெளிக்குக் காட்டாமலிருப்பதில்லை. அதுபோல் அவள் எங்கள் குடும்பத்தில் நீண்டகாலப் பழக்கமுடையவளாயிருந்தும், தன்னுடைய தீய குணத்தை விடாமல் உள்ளேயே வைத்து வந்திருக்கிறாள்—இதனால்—நான்—ஒருவர்க்கு இயற்கையில் ஏற்பட்ட குணம் இலகுவில் மாறாது—என உரைவாயினேன். இதனாலன்றோ பெரியோர்கள் "நாய் வாலைக் குணக்கெடுத்து வணக்கித் தீட்டின் நற்றமிழை எழுத எழுத்தாணியாமோ" என்றும் "நாய்க்குணம்போகாதையா ராஜகோபாலமாலே". என்றும் கூறியிருக்கிறார்கள். ஐயா, இனிமேல் பேச மனம்கூசுகிறது. பொருள் எப்படிப்பட்ட தன்மையுடையவர்களையும் மயக்கிவிடுகிறது. பொருளுக்கு அடிமையானவன், பொருள் தேடுவதில் அவாவுடையவன் "நாய்

விற்றகாசு குலைக்குமா—" என்று சொல்லிக்கொண்டு தகாத வழியிலே பொருளைத்தேடத் துணிகிறான். உலகத்திலே பணக்காரரிலே பெரும்பான்மையர் தகாத வழியில் பொருள் தேடியவர்களாகத்தான் இருக்க வேண்டுமெனத் தெரிகிறது. பொருளில் ஆசைகொண்டவனைவிட லோபி இழிவானவன். நீலகிரியில் ஓர் அந்தணன் இருக்கிறான். அவன் பரமலோபி—அவன் தன் வயிற்றுக்குச் சரியாய்ச் சாப்பிடாமல் காசு சேர்க்கிறான். அவன் ஒரு சமயம் வீட்டில் தானே சமையல் செய்யும்படியாயிற்று. அவன் சமையல் செய்து வழக்கமில்லாதவனாகையினால் சோற்றைப் பதமாகுமுன்பே வடித்துவிட்டான். அன்றையதினம் நான் அவன் வீட்டுக்குப் போயிருந்தேன். அவன் அந்தச் சோற்றையே தன் மக்களுக்கும் போட்டுத் தானுமுண்டான். அது எப்படி எனக்குத் தெரியுமென்றால்;—அவன்—தன்னுடைய இந்த நடத்தையை என்னோடு சொல்லிக் கொண்டு 'நான் என்னுடைய குழந்தைகளை எல்லாவழியிலும் பழக்கியிருக்கிறேன். நானும் பழகிக் கொண்டிருக்கிறேன். என் மனைவிக்கும் பழக்கமுண்டு' என்று கூறினான். நான் "அடபாவி உன் காசில் இடிவிழ, குழந்தைகளுக்கு நல்லசோறு, சோற்றுக்கடையிலிருந்தாவது வரவழைத்துப் போடப்படாதா?—" என்று திட்டிவிட்டு மறுநாள் அவன் வீடு வந்தேன். அவன் குழந்தைகளில் ஒன்றுக்கு வயிற்றுப் போக்குண்டாய்க் கண் சொருகிட்டுக் கிடந்தது. நான் அதைக் கண்டதும் "அடலோபி, இப்படியும் போகுமா உனக்குப் புத்தி" என்று கூறி எனக்குத் தெரிந்த ஒருமருந்து கொடுத்து விட்டுத் திரும்பினேன்.

(வரும்)

**பாலவிநோதினி.**

## பக்திக்கினிக்கும் பனுவல்கள்.

முக்காலும் வேலுமயிலு மென்றோதென முன்னைவினை
யைக்காலறுத் தெனை-யாட்கொள நீயரு ளம்மொழியை
மைக்காலுங் கட்குற வள்ளிபங்கா மறவாதடியேன்
எக்காலும் வேலு மயிலுமென்பே னருளின்புறவே.

படுத்தாலும் வேலு மயிலுமென்பேன் பரமானந்தநீ
கொடுத்தாலும் வேலு மயிலுமென்பேன் குறையாதசெல்வம்
அடுத்தாலும் வேலு மயிலுமென்பேன் பிற ரச்சுறுத்தித்
தடுத்தாலும் வேலு மயிலுமென்பேன் சிவசண்முகனே.

உண்டாலும் வேலு மயிலுமென்பே னொழியாத சுகம்
கொண்டாலும் வேலு மயிலுமென்பேன் றுயில்கூர்ந்தறிவு
விண்டாலும் வேலு மயிலுமென்பேன் வெவ்வினைப்பகையைக்
கண்டாலும் வேலு மயிலுமென்பேன் செந்திற் காங்கயனே.

நின்றாலும் வேலு மயிலுமென்பே னெடிதேகுநெறி
சென்றாலும் வேலு மயிலுமென்பேன் வினைதீர்ந்து பகை
வென்றாலும் வேலு மயிலுமென்பேன் வினையேவளர்ந்த
தென்றாலும் வேலு மயிலுமென்பே னருளேரகனே.

வாழ்ந்தாலும் வேலு மயி மென்பேன் வறுமைத்துயரம்
சூழ்ந்தாலும் வேலு மயிலுமென்பேன் தொலையாத வின்பத்
தாழ்ந்தாலும் வேலு மயிலுமென்பே னழியாநரகில்
வீழ்ந்தாலும் வேலு மயிலுமென்பேன் செந்தில்வேலவனே.

படித்தாலும் வேலு மயிலுமென்பேன் பகைகோடி சினந்
தடித்தாலும் வேலு மயிலுமென்பேன ரவாதிவிடங்
கடித்தாலும் வேலு மயிலுமென்பேன் கலகத்திருடர்
பிடித்தாலும் வேலு மயிலுமென்பேன் செந்திற்பேரொளியே.

துதித்தாலும் வேலு மயிலுமென்பேன் பிறர் தூறி யவ
மதித்தாலும் வேலு மயிலுமென்பேன் மகத்தானசெல்வம்
கதித்தாலும் வேலு மயிலுமென்பே னருகாத்துயர் நீ
விதித்தாலும் வேலு மயிலுமென்பேன் செந்தில்வேலவனே

மறந்தாலும் வேலு மயிலுமென்பேன் மறந்தேழையை நீ
துறந்தாலும் வேலு மயிலுமென்பேன் தொலையாதவின்பஞ்
சிறந்தாலும் வேலு மயிலுமென்பே னிந்தத் தேகத்தைவிட்
டிறந்தாலும் வேலு மயிலுமென்பேன் றிருவேரகனே.

கெட்டாலும் வேலு மயிலுமென்பேன் இளையானவர்கை
விட்டாலும் வேலு மயிலுமென்பேன் புவி வேந்தர்மெச்சி
நட்டாலும் வேலு மயிலுமென்பே னயவாத துட்டர்க்
கெட்டாத கொம்புக்கனியே திருச்செந்தி லீசுவரனே.

பால ஸரஸ்வதி தேவருஞ்சரியம்மாள்.

---

கொல்லங் கோட்டுக் கருகே ஓர் ஊரில் மொய்தீன் பட்டாணி என்ற குடிகாரன் அவனது குடி காரணமாக அவனுடன் சேர்ந்து வாழ்ந்திருக்க மறுத்த பதினெட்டு வயதுள்ள தனது மனைவியின் கழுத்தை வெட்டிக் கொன்றுவிட்டு ஓடி விட்டான்.

எஸ்கிமோ ஜாதியார் வைத்தியர் வந்தவுடன் பணங் கொடுத்து விடுகிறார்கள். நோயாளி குணமாய்விட்டால் வைத்தியர் பணத்தை வைத்துக் கொள்வார். இல்லாவிட்டால் திரும்பக் கொடுத்து விடுவாராம். நமது வைத்தியர்கள் இதனைப் பைத்தியமென்று கருதுவார்கள்.

210776

# பாலவிநோதினி

## குழந்தைகளின் அன்பன்

| | | |
|---|---|---|
| வருட சந்தா தபால் கூலி யுள்பட | இந்தியா, பர்மா, சிலோன் ... | ரூ. 1 8 0 |
| | பினாங்கு, சிங்கப்பூர் முதலிய வெளிநாடுகளுக்கு ... | ரூ. 2 0 0 |
| தனிச்சஞ்சிகை ... | ... விலை | ரூ. 0 2 0 |

1. பத்திரிகைக்கு ஜனவரி௴ முதல் டிசம்பர்௴ வரையில் ஒரு வருஷக்கணக்கு. எந்த மாதத்தில் சேர்ந்தாலும் ஜனவரி மாதம் முதற்கொண்டே சஞ்சிகைகள் அனுப்பப்படும். ஒரு வருஷத்திற்குக் குறைந்த சந்தா கிடையாது.

2. சந்தாதாரராய்ச் சேருகிறவர்கள் முழு விலாசத்தையும் தெளிவாய் எழுதியனுப்பவேண்டும்.

3. சந்தாத்தொகையை முன்னாடி செலுத்தியாவது அல்லது வி. பி. யில் கட்டியாவது பத்திரிகையைப் பெற்றுக் கொள்ளலாம்.

4. வி.பி. யில் பெற்றுக் கொள்வதானால் அணா மூன்று அதிகமாய்ச் செலவாகிறபடியால் சந்தாத்தொகையை மணியார்டர் செய்வதே நலம். இது முக்கியமாய்க் கவனிக்க வேண்டியது.

5. யாருக்கேனும் சஞ்சிகை சேராவிட்டால் ஒரு மாதத்திற்குள் தெரிவித்தால்தான் மறுபடி யனுப்பக்கூடும்.

6. இடம்மாறும் சந்தாதாரர்கள் அடுத்த சஞ்சிகை தங்களுக்குப் புதுவிலாசத்திற்கு வந்து சேரும் வண்ணம் தபாலாபீஸோடு ஏற்பாடு செய்துகொண்டு நமக்குப் புதுவிலாசத்தை அறிவிக்கவேண்டும்.

7. சந்தா நெம்பரைக் குறிக்காமல் எழுதும் கடிதங்கள் கவனிக்கப்படமாட்டா.

### விளம்பர விகிதம்

| | | |
|---|---|---|
| ஒரு பக்கத்திற்கு ஒரு மாதத்திற்கு | ... | ரூபா 10—0—0 |
| அரைப் பக்கத்திற்கு ,, | ... | ரூபா 5—0—0 |

காண்டிராக்ட் ரேட்டானால் சகாயமுண்டு.

விலாசம்:—மானேஜர்—பாலவிநோதினி ஆபீஸ்,
323, திருவொற்றியூர் ஹைரோட், சென்னை.

# அமிர்தாஞ்சனம்.

சர்வ நோய்களுக்கும்




ஸித்த ஔஷதம்

விலை அணா 10 அணா 0-10-0

இருபத்தைந்து வருஷமாக
லக்ஷக்கணக்காக விற்று வருகிறது
அபூர்வ மூலிகைகளினால் தயார் செய்யப்பட்டு
அழகாய் பாக்கிங்செய்து உபயோகத்துக்குத் தயாராய்

## எல்லா நோவுக்கும்

ஒரு கைகண்ட ஔஷதம் அமிர்தாஞ்
சனமே. தலைவலி, முதுகுவலி, கீல்பிடிப்பு முத
லிய சகலநோய்களையும் நொடிப்பொழுதில் தீர்க்கும்.

## அமிர்தாஞ்சன் டிப்போ,

**7, தம்புச்செட்டி தெரு, சென்னை.**


Vavilla Press, Madras.